திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனம்

20-வது மஹா சன்னிதானமாக எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்

திருஞானக்கொலுவில் எழுந்தருளியிருக்கும் சமயத்தில்

விண்ணப்பிக்கும் கட்டியம்.

சீர்பூத்த கயிலாய பரம்பரைச் சைவசித் தாந்தபீ டாதி பதியே
நார்பூத்த நந்திதிரு மெய்கண்ட சந்தான தனியோங்க வந்த நிதியே
பேர்பூத்த பஞ்சாக் கரநாத னருள்பெற்ற பேரின்ப மூர்த்தி முதலே
பார்பூத்த துறைசையம் பலவாண வள்ளலே பரம்நற்றம சிந்தா மணி.

ஷை கொலுவில் விண்ணப்பிக்கும் வண்ணச்சிந்து. இராகம் — கமாஸ். ஏகதாளம்.

அருளாருந்தண்டுன்றைசைப்பதியம்பலவாண தயாநிதியே
தெருளாருஞ் சைவசித்தாந்தச் சுத்தமெய்ஞ்ஞான தலாநிதியே.
வேதாகமநெறிமேயவனே
யாதாரப்பொருளாயவனே
தொண்டென்றுங்
கொண்டின்பங்
கண்டன்பர்
விண்டவிலாதுறை (அருள்)

திருக்கயிலைக் கல்லாலுறைதரு தேசிகனூர்அருள் சிந்தையனே
பெருக்கவருள் போதஞ்சித்தியார் பேசுசிவாகம விந்தையனே.
அருக்கமிலா நந்திமெய்கண்டவர் சந்ததியாண்டிடு முந்தையனே
தருக்கநிறை யகத்தியநூல் பல தக்கவராய்ந்திடு தந்தையனே.
அதிதாச்சிரம நல்லாரியனே
கதிதாவென்பவர் காரியனே
மஞ்சென்றும்
வந்தெங்குந்
தங்குந்தண்
ணிஞ்சிகளுயர்தரு (அருள்)

ஆறுவகைச் சமயர்க்கருள்புரியண்மையனே கலைவண்மையனே
கூறுவகைப் பலகலையாகமவுண்மையனே மிகுநண்மையனே
ஆற்றூ தத்துவமே லவர்க்கண்ணியனே யருட்கண்ணியனே
தேறுவகை தெளிதரு மாணவர்க்குள் ளொளியாகிய தண்ணியனே.
பரமததிமிரப்ரபாகரனே
பரசிவநிதியெங்க்ருபாகரனே
கந்தந்தங்
கும்பண்பின்
வீந்தெங்கும்
பூமணம்வீசுறும் (அருள்)

பொடியாரும் அடியவர் பவவினை போக்கிடவந்தருள் புண்ணியனே
நொடியாரும் அதிரகசியமொழியாகிய வாசகநுண்ணியனே
கடியாரும் மகிதலம் வாழ்வார் கருதிடு சீர்பெறு கண்ணியனே
செடியாரும் உடலணுகாதவர் தேசிகனாகிய தண்ணியனே
குணநிதி தவநிதி குருநிதியே
கணநிதி சிவநிதி வரநிதியே
தவமென்றுந்
தனமென்றுந்
மனமொன்றும்
நினதாயுள்வாழ்கவே. (அருள்)

சித்திரபானுவரு தைமீ க் குருபூஜையில் மஹாசன்னிதானத்தின் திருவடிக்குச் சமர்ப்பிக்கப்பெற்றது.

திருவாவடுதுறை,
4—2—'43.

திருவாவடுதுறை ஆதீனம்
ஆத்மநாத ஓதுவார் விண்ணப்பித்தது.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras, Editor, C. R. Srinivasa...

சுதேசமித்திரன்

Vol. 14 No 6 14-3-43 வாரப்பதிப்பு Price 2 Annas

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு 14-3-'43

பொறுத்துப் பார்ப்போம்

★

மக்கள் மனத்தை அழுத்தி வந்த ஒரு பெரும் பாரம் நீங்கிவிட்டது. மகாத்மா மேற்கொண்ட கடுந் தவம் வெற்றிகரமாக நடந்தேறியது கண்டு அவர்கள் உள்ளம் பூரிப்பை வர்ணிக்க முடியாது. நாடெங்கும் ஆண்டவன்பால் நன்றி உணர்ச்சி வெள்ளம்போல் பெருகக் கண்டோம். உபவாசத்தால் உடல் நலிந்த மகாத்மா இப்போது சிறிது சிறிதாக வலுப்பெற்று வருகிறார். இந்தக் கடும் விரதத்தால் பயனேதேனும் உண்டா என்று கேட்கலாம். காந்திஜி சம்பந்தப்பட்டவரை அவர் நோக்கம் ஓரளவு ஈடேறி விட்டதென்பதில் சந்தேகமில்லை.

காந்திஜி கோரியதுபோல அவர் வைஸ்ராயைச் சந்தித்துப் பேசியிருந்தால், நாட்டில் நிகழ்ந்த கலவரங்களைத் தவிர்த்திருக்கலாமென்பது தெளிவு. காந்திஜியின் உபவாசம் இந்தியா முழுதிலும் மட்டுமின்றி, வெளிநாடுகள் பலவற்றிலும் கொந்தளிப்பு உண்டாக்கியது. வைஸ்ராயின் நிர்வாக சபையில் கூட மூவர் ராஜிநாமா செய்தனர். ஆனால் அதிகார வர்க்கம் மட்டும் அசைந்து கொடுக்கவில்லை. கலவரங்களுக்கெல்லாம் காந்திஜியும் காங்கிரஸும் தான் பொறுப்பாளியென்று இன்னும் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். பலாத்காரச் செயல்களை தாம் சிறிதும் ஆதரிக்கவில்லையென்று காந்திஜி சென்ற செப்டம்பர் மாதம் 23-ந் தேதி வைஸ்ராய்க்கு எழுதிய கடிதத்திலேயே தெளிவுபடுத்தியிருக்கிறார். ராஜாஜி எடுத்துக்காட்டுவது போல் அக்கடிதத்தை அப்போதே வெளியிட்டிருந்தால் பிறகு நடந்த அமளிகளைத் தவிர்த்திருக்கலாம். சென்ற பிப்ரவரி மாதத்தில் அவர் வைஸ்ராயைப் பார்த்த போதுகூட அவரிடம் வைஸ்ராய் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. அது மட்டுமின்றி காந்திஜி கலவரங்களைக் கண்டிக்க முன்வரவில்லையே யென்று அவர் ராஜாஜியிடம் துக்கம் தெரிவித்தாராம். கலவரங்களை நிறுத்திய பெருமை காந்திஜியைச் சேரக்கூடாதென்பதுதான் அவரது கடிதத்தை மறைத்து வைத்திருந்ததின் கருத்துப் போலும்! உண்ணுவிரதத்தின் பொழுது தம்மைப் பேட்டி கண்ட ராஜாஜியிடம் காந்திஜி மற்றோர் முறை தமது கருத்தை விளக்கி வைத்தார். நாசவேலைகளுக்கும் பலாத்காரச் செயல்களுக்கும் தமது ஆதரவு கிடையாதென்பதில் அவர் துளிக்கூடச் சந்தேகத்துக்கு இடம் வைக்கவில்லை. இதற்குபின் அவரையும் மற்ற காங்கிரஸ் வாதிகளையும் மேற்கொண்டு சிறையில் வைத்திருக்க ஒரு சால்ஜாப்பும் சொல்ல முடியாது. யுத்த முயற்சியில் முழு வேகம் பாய, ராஜீயச் சிக்கல் தீர்ந்தாக வேண்டும். காந்திஜி விடுதலையின்றி அச்சிக்கல் தீர்வது அசாத்தியம். அரசியல் நெருக்கடியைத் தீர்க்க பம்பாயில் கூடிய பிரமுகர்களின் முயற்சியாவது பலிக்குமா? பொறுத்துப் பார்ப்போம்.

சீனக் கல்வித் தூதுகோஷ்டி



சீனர்களின் கல்வித் தூதுகோஷ்டியினர் சமீபத்தில் டில்லி வந்து சேர்ந்தனர். இவர்களுக்கு வைஸ்ராய் லின்லித்கோவும் அவரது மனைவியும் ஒரு உபசாரம் நடத்தினர். படத்தின் மத்தியிலிருப்பவர் தூதுகோஷ்டியின் தலைவர். அவரது பெயர் டாக்டர் யு. எச். கூ.

சென்ற வார நிகழ்ச்சிகள்

ஐரோப்பிய பிரயாணியின் பிடிவாதம்

முதல் வகுப்பு வண்டியில் திவான்பகதூர் ஏ. லக்ஷ்மணஸ்வாமி முதலியாருக்கு ரிசர்வ் செய்த ஸ்தானத்தைக் காலி செய்ய ஒரு ஐரோப்பிய பிரயாணி மறுத்ததால், 6-ந் தேதி இரவு 7-30 மணிக்குப் புறப்பட்டிருக்க வேண்டிய மலபார் எக்ஸ்பிரஸ் அரைமணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது. ஸ்டேஷன் சூப்பிரண்டும், ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டரும் எவ்வளவோ வாதாடியும் ஐரோப்பியர் அந்த ஸ்தானத்தை விட்டு விலக மறுத்துவிட்டார். கடைசியில் முதலியார் ஒரு மேல் பெஞ்சியில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. பிரஸ்தாப ஐரோப்பியர் இறுதியில் ஸ்ரீ முதலியாயிடம் மன்னிப்புக் கோரினார்.

* * * *

கனம் ஆனேக்கு அவமதிப்பு

இந்தியா சட்டசபையின் 8-ந் தேதிய கூட்டத்தில் நாகபுரி ஸ்டேஷனில் சில சோல்ஜர்கள் ஸ்ரீமான் எம். எஸ். ஆனே விஷயத்தில் அவமரியாதையாக நடந்துகொண்டது பற்றி விவாதிக்க ஸ்ரீ கோவிந்த தேஷ்முக் ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வந்தார். ரயில்வே மெம்பர் அந்த சம்பவம் சம்பந்தமான விஷயங்களை விளக்கிய பிறகு ஸ்ரீமான் தேஷ்முக் தமது பிரேரணையை வாபஸ் வாங்கிக்கொண்டார்.

நாகபுரி ஸ்டேஷனிலிருந்து இரண்டாவது வகுப்பு வண்டியொன்றைத் தமக்கு ரிசர்வ் செய்ய வேண்டுமென ஸ்ரீமான் ஆனே கேட்டுக்கொண்டார். நாகபுரி ஸ்டேஷன் இடையில் இருக்கும் ஒரு ஸ்டேஷன் ஆதலால் அங்கு இடம் கிடைக்குமென உறுதியாகச் சொல்ல முடியாது. நாகபுரி ஸ்டேஷனில் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஒரு ஸ்தானம் காலியாகவிருந்தது. ஸ்ரீ ஆனே அதைக்கண்டதும் அதில் ஏறிக்கொண்டார் சற்றுநேரத்திற்கெல்லாம் ஒரு ராணுவ உத்தியோகஸ்தர் ஹோட்டலில் இருந்து வந்து அந்த இடம் தம்முடையதென்றும் ஹௌரா ஸ்டேஷனிலிருந்து தாம் வருவதாகவும் கூறினார். அதன் மேல் வேறு வண்டியில் ஸ்ரீ ஆனேயுக்கு இடம் கொடுக்கப்பட்டது. அந்த இடத்தில் இருந்தவர் வேறு இடத்துக்குப் போய்விட்டார். ஸ்ரீ ஆனே ரயில்வே சிப்பந்திகள் தமக்குச் செய்த உதவிக்காக வந்தனம் செலுத்தினார். பொய்யான விவரத்தைப் பரப்பியவர்கள் விஷயத்தில் நடவடிக்கை எடுக்க சர்க்கார் முயன்றுவருகிறார்கள். இதுதான் நடந்த தகவலென கனம் பெந்தால் சொல்லி முடித்து உட்கார்ந்ததும் சபையினர் விசேஷ கரகோஷம் செய்தனர். ஸ்ரீ தேஷ்முக்கும் கனம் பெந்தால் அறிக்கை தமது கவலையைத் தீர்த்துவிட்டதாகச் சொல்லிப் பிரேரணையை வாபீஸ் வாங்கிக்கொண்டார். ஸ்ரீ ஆனேயும் இந்த சம்பவத்தின் உண்மையை விளக்கி ஓர் அறிக்கை விடுத்தார்.

* * * *

பத்திரிகைகள் விலைக் கட்டுப்பாடு

தினசரிப் பத்திரிகைகளுக்கும் வார சஞ்சிகைகளுக்கும் குறிப்பிட்ட விலைக்கு இவ்வளவு பக்கங்கள்தான் பிரசுரிக்கலாமென்றும், பத்திரிகைகளில் விளம்பரங்கள் எந்த அளவுக்குப் பிரசுரிக்கலாமென்றும் நிர்ணயித்துச் சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

'ஏ' வகுப்பு தினசரிகள் ('சுதேசமித்திரன்' தினசரி போன்ற அளவுள்ளவை) ஒரு வாரத்தில் பிரசுரிக்கக்கூடிய மொத்த பக்கங்கள்:—

விலை	பக்கங்கள்
1-அணு முதல் 1½-அ வரை	14
1½ ,, 2 ,,	20
2 ,, 3 ,,	28
3 அணுவுக்கு மேல் விலையுள்ளவை	42

வாரப்பத்திரிகைகளும், மாதமிருமுறை பிரசுரம் செய்யப்படும் சஞ்சிகைகளும் ஒரு மாதத்தில் பிரசுரிக்கக் கூடிய மொத்த பக்கங்கள்:—

(18-ம் பக்கம்)

இந்த இதழில்

பக்கம்

போர் போகும் போக்கு 4
புஷ்பஹாரம் (தொடர்கதை) 5
குண்டலகேசி 7
திட்டமான வாழ்க்கை 9
சங்கீதம் 11
நவநாகரீகம் 12
ஜோதிர்மண்டலம் 13
தமிழர் வீரம் 15
உங்கள் இஷ்டம் போல் (சிறுகதை) 16
சீரான உலக ஏற்பாடு 17
நாலுகால் வீரன் 18
புத்தி நுட்பம் (சிறுவர் பகுதி) 19

ரஷ்யப் போர்முனை

மாஸ்கோவுக்கு வடமேற்கேயுள்ள ரிஷவ் என்ற முக்கியமான ஜெர்மன் தளத்தை ரஷ்யர் கைப்பற்றி விட்டனர். அடுத்தபடியாக காட்ஸ்க் என்ற ஸ்தலத்தையும் எதிரிகள் பறிகொடுத்து விட்டார்கள். மாஸ்கோவுக்கு மேற்கே 140 மைல் தூரத்திலுள்ள வியாஸ்மா என்ற கேந்திர ஸ்தானத்துக்கும் ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. அங்கும், பிரியான்ஸ்கிலும் உள்ள ஜெர்மன் படைகளை வடக்கிலும், கிழக்கிலும் மட்டுமின்றி மேற்கிலும் அதாவது பின்புறத்திலும் ரஷ்யர் வளைத்துக்கொண்டு விடலாமென்று தோன்றுகிறது. ஆனால் வியாஸ்மா துண்டிக்கப்படு முன், ஜெர்மனியர் அதைக் காலிசெய்து பின்வாங்கக்கூடும். வியாஸ்மாவுக்கு வடக்கேயுள்ள ஸிசிவ்கா என்ற ஸ்தலத்தையும் சோவியத்படைகள் ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டன.

தெற்கே ஓரலுக்கும் ஆபத்து அதிகரித்து வருகிறது. ஆனால் ராஸ்டாவுக்கு மேற்கே ஜெர்மன் எதிர்ப்பு வேகம் தணியவில்லை. டானட்ஸ் பகுதியில் ரஷ்யர் முன்போல் அவ்வளவு வேகமாக முன்னேறுவதாகத் தெரியவில்லை.

* * * *

வாலஸ் எச்சரிக்கை

யுத்தம் முடியுமுன் பிரிட்டனும், அமெரிக்காவும் ரஷ்யாவுடன் ஒரு சமரச ஏற்பாடு செய்து கொள்ளாதிருக்குமாயின் மற்றொரு யுத்தம் ஏற்படுமென அமெரிக்க உதவி ஜனாதிபதி மிஸ்டர் வாலஸ் தெரிவித்தார். ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் பரஸ்பரம் நல்லுறவும், நம்பிக்கையும் ஏற்பட்டாலன்றி, ரஷ்யாவும், ஜெர்மனியும் ஒன்று சேர்ந்துவிடக் கூடுமென்றும் அவர் எச்சரித்தார்.

* * * *

ரஷ்யா மீது இன்னும் துவேஷமா?

தென்னாப்பிரிக்க சர்க்கார் பொது உடமைக் கட்சி நடவடிக்கைகளை அடியோடு ஒடுக்குவதுடன், ரஷ்யாவுடன் உள்ள அரசியல் உறவை ரத்து செய்துவிட வேண்டுமென்று தென்னாப்பிரிக்கச் சட்டசபையில் தேசியக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் கொண்டு வந்த பிரேரணை தோற்றது. அதற்கு சாதகமாக 36 பேரும் எதிராக 54 பேரும் வாக்களித்தனர்.

ஆப்பிரிக்க அரங்கம்

டியுனிஸியாவில் தென் புகுதியில் ரோமலின் துருப்புகள் எட்டாவது பிரிட்டிஷ் படை மீது தொடுத்த ஒரு பெரிய தாக்குதல் பலிக்காமல்போய்விட்டது. எதிரிகள் பெருவாரியாக ஆட்களையும் தளவாடங்களையும் இழந்ததைத் தவிர வேறு பலனெதுவுமில்லை. நேசப்படை வரிசையைப் பிளப்பதற்கான முயற்சியிலும் எதிரிக்கு ஏமாற்றமே ஏற்பட்டது. ஆனால் மாரத் 'அரண்' வரிசையை ஒட்டி இன்னும் ஏராளமான எதிரிப்படைகளும் தளவாடங்களும் திரட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. சீக்கிரத்தில் மற்றொரு எதிரித் தாக்குதல் துவங்குமென்று நேச அதிகாரிகள் எதிர் பார்க்கின்றனர். அமெரிக்கப் படைகள் பிசான் நகரை ஆக்கிரமித்துக் கொண்டபின் மேற்கொண்டு கிழக்குநோக்கி முன்னேற முயன்றனர் ஆனால் பின்னர் அவை பிசானையும் காலிசெய்து அதற்கு மேற்கே ஒரு மைல் தூரத்திலுள்ள ஸ்தலமொன்றுக்குப் பின் வாங்கின. ஆனால் இதற்கு எதிரித் தாக்குதல் காரணமில்லையென்று சொல்லப்படுகிறது.

* * * *

தென் மேற்கு பஸிபிக்

சில தினங்கள் முன் ஜப்பானுக்குப் பலத்த அடி விழுந்தது. 10 யுத்தக் கப்பல்களையும், துருப்புகள் நிறைந்த 12 சாதாரணக் கப்பல்களையும் கொண்ட ஒரு எதிரிக் கடற்படை நியுகினியை நோக்கி வந்துகொண்டிருந்தது. அவை நியுகினிக்கு வந்து சேர விட்டிருந்தால் அங்குள்ள நேசப்படைக்குப் பெரிய அனர்த்தமேற்பட்டிருக்கும். ஆனால் நேச விமானங்கள் வழியிலேயே அப்படையை மடக்கி அவ்வளவையும் அடியோடு அழித்துவிட்டது. எதிரிகள் தங்கள் கப்பல்கள் அனைத்தையும் இழந்ததுடன், 15,000 ஜப்பானியத் துருப்புகள் மூழ்கி மாண்டதாகக் கருதப்படுகிறது. எதிரிக்கு ஏராளமான விமானங்களும் நஷ்டம். இவ்வளவு மகத்தான வெற்றியை நேச அதிகாரிகள் விமானங்களைக் கொண்டே சாதித்திருக்கின்றனர். ஆஸ்திரேலியாவுக்கு ஏற்படவிருந்த ஆபத்து இதன் மூலம் தற்காலிகமாக நீங்கியிருக்கிறது. எதிரிக்குப் பலத்த அடிதானாயினும், அவர்களது பலம் இதன் மூலம் சிதைந்து விட்டதாக எண்ணுவது தவறு. நியூ பிரிட்டனிலுள்ள ராபால் முதலிய துறைமுகங்களில் இன்னும் பெருவாரியான எதிரிக்கப்பல்கள் திரண்டிருக்கின்றன. மேலும் இவ்வரங்கத்தில் எதிரி விமானப்படை நேச விமானப்படையை விட அதிகமென்றும் ராய்ட்டரின் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார்.

ஜப்பான் செய்த பெரும் பிழை

இந்த வருஷம் உலக யுத்தம் முடிந்துவிடவேண்டும் என ஜப்பானியப் பிரதம மந்திரி ஜெனரல் டோஜோ கூறியதைக் குறித்து 'டைம்ஸ்' பத்திரிகை எழுதுவதாவது:—

"நேச தேசங்கள் பிசகு செய்திருக்கலாம். ஆனால் இப்போது டோஜோவின் வீராப்பைப் பார்க்கும்போது இந்த யுத்தத்தை ஆரம்பிப்பதில் ஜப்பானியர் அதைவிட அதிகப் பிசகு செய்திருப்பதே புலனாகிறது. திடீரென்று பிரிட்டிஷ்காரர்களையும், டச்சுக்காரர்களையும், அமெரிக்கரையும் கடுமையாகத் தாக்கத் தங்களுக்குச் சக்தி உண்டு என்று அவர்கள் எண்ணினர். நேசதேசங்கள் அவற்றைச் சமாளித்துக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி மட்டும் அவர்கள் சிந்திக்கவே இல்லை. அவர்கள் இப்போது ஒரு பெரிய தற்காப்பு யுத்தத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

1941-ல் ரஷ்யாமீது படையெடுத்தபோது ஹிட்லர் எம்மாதிரி பிசகைச் செய்தாரோ அதேமாதிரி பிசகைத்தான் ஜப்பானியரும் செய்திருக்கின்றனர்."

பர்மா மீது இப்போது பெரிய தாக்குதலில்லை

பர்மாவில் சமீபத்தில் பருவ மழை ஆரம்பமாகப் போவதால் பர்மா ரஸ்தாவைக் கைப்பற்ற பெரும் படையெடுப்பு எடுப்பது தற்சமயம் முடியாது. ஜப்பானைத் தாக்குவதற்கு வேண்டிய தளவாட சப்ளைக்காகச் சீனா இவ்வருட முடிவு அல்லது அடுத்த வருட ஆரம்பம்வரை காத்திருக்க வேண்டியதுதான் இந்தியாவிலிருந்து சீனாவிற்கு விமானங்கள் மூலம் போதுமான பெட்ரோல் அனுப்புவதென்பதும் முடியாது என்று ஒருநிருபர் அறிவிக்கிறார்.

சுமார் ஆறு வாரங்களில் மழை யாரம்பிக்கக்கூடுமாதலால், மழைக்கு முன்பு சில முக்கிய இடங்களைக்கைப்பற்ற இரு தரப்பினரும் முயல்கின்றனர்.

காலனி நிர்வாகத்தில் பிறருக்குப் பங்கில்லை!

காலனி இலாகா மந்திரியான மிஸ்டர் ஆலிவர் ஸ்டான்லி இன்றிரவு ஆக்ஸ்போர்டில் காலனிகள் பற்றிய எதிர்காலக் கொள்கையைக் குறித்துப் பேசினார். பிரிட்டிஷ் காலனிகளின் நிர்வாகத்தை சர்வதேசப் பிரதிநிதிகளிடம் ஒப்படைப்பதை நோக்கமாகக் கொண்ட எந்த திட்டத்தையும் நிராகரிப்பதாக அவர் கூறினார்.

"பிரிட்டிஷ் காலனிகள் நிர்வாகம் இனியும் பிரிட்டனின் தனிப்பட்ட பொறுப்பாகவே இருந்து வரவேண்டும். அவற்றை ஒரு சர்வதேச ஸ்தாபனம் நிர்வகிப்பதால் எந்த குறிப்பிட்டதொரு காலனிக்கோ, உலகம் முழுதுக்குமோ நன்மை ஏற்படுமென்ற பேச்சை நான் ஆதரிக்கவில்லை. ஆனால் நான் வற்புறுத்தும் கொள்கையில் சர்வதேச ஒத்துழைப்புக்கு இடமில்லாமல் போய்விடாது. அத்தகைய ஒத்துழைப்பு மிகவும் அவசியமென்றே நான் எண்ணுகிறேன்."

அமெரிக்காவிலுள்ளவர்கள் "நேச முறையில், விருப்பு வெறுப்பு உணர்ச்சியின்றி வெளியிடும் புகார்க"ளுக்குப் பதிலளிக்கையில், மிஸ்டர் ஸ்டான்லி மேற்கண்டவாறு கூறினார்.

மேற்குப் பாலைவனத்தில் பிரிட்டிஷ் டாங்கிப் படைத் தலைவர்களில் ஒருவர் தமது டாங்கிமீதிருந்து தமது படையினருக்கு 'ஸிக்னல்' கொடுக்கிறார்.

தொடர் கதை



புஷ்ப ஹாரம்

ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி. ஆர்.ஸ்ரீனிவாஸன்

முன் கதைச் சுருக்கம்

★

[சிவசங்கரையர் சகல சவுகரியங்களும் படைத்தவர். குழந்தையில்லையென்பது தான் அவருக்கும் அவரது மனைவி ஸ்வர்ணம்பாளுக்கும் பெரிய குறை. சிவசங்கரையரின் தங்கை பிள்ளையான ரகுராமனை அவர்கள் இருவரும் தங்கள் பிள்ளையைப்போல் வளர்க்கிறார்கள். நாளாவட்டத்தில் ஸ்வர்ணம்பாளுக்கு ரகுராமனிடத்தில் வெறுப்புத் தட்டுகிறது. பி. ஏ. படித்தும் வேலையில்லாமல் மனம் புழுங்கிய ரகுராமன் தன் இளமனைவி ஜானகியிடம் கூடச் சொல்லிக்கொள்ளாமல் வெளியேறி விடுகிறான். ஜானகியிடத்தில், ஸ்வர்ணம்பாள் ஈவிரக்கமில்லாதபடி நடந்து கொள்கிறாள். சிவசங்கரையர் ரகுராமன் பிரிவால் மனம் வருந்தி அவனைப் பல விடங்களிலும் தேடுகிறார். பயனில்லை.]

அத்தியாயம் 2.

நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும் ஓடிற்றே தவிர சுந்தரேசசன் பற்றிய தகவலே கிடைக்கவில்லை. ஜானகி நாளுக்கு நாள் துக்கத்தினால் இளைத்தாள். சுவர்ணம்பாள் ஹிம்சையினால் தோலும், எலும்புமாக தேய்ந்துக்கொண்டே வந்தாள். தனது உயிருக்குயிரான குழந்தை சுந்தரேசனை காணாமல் அதே ஏக்கத்தில் சிவசங்கரய்யரும் விசாரப்பட்டு விசாரப்பட்டு நாளடைவில் ஹிருதய நோயால் பீடிக்கப்பட்டு இரண்டு மாதங்களில் காலமானார். அந்த சத்குணவதி ஜானகிக்கு ஓரே ஒரு ஆதாரமாக விருந்த அய்யரும் மரணமடையவே சுழலில் அகப்பட்டுக்கொண்ட படகு போல் சுவர்ணம்பாள் கையில் அகப்பட்டுக்கொண்டு தவித்தாள். ஜானகி எட்டாம் வகுப்புவரையிலும் படித்திருந்தாள். சித்திரமெழுதுவதிலும் தையல்வேலையிலும், பாட்டிலும் நல்ல பயிற்சி பெற்றிருந்தாள். பள்ளிக்கூடத்தில் இக்கலைகளில் அவளுக்கு பல தடவைகள் முதல் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. அந்தக் கலைகளில் அவளுக்கிருந்த பித்து இப்பொழுதும் அவளை விட்டகலவில்லை. ஒழிந்த நேரத்தில் தனது கணவனைச் சீக்கிரம் தன்னிடம் சேர்க்கவேண்டுமென்று பகவானை பிரார்த்தித்தவாறு ஏதாவது தைப்பாள். அல்லது சற்று நேரம் சித்திரம் வரைவதில் தனது விசனத்தையும், அலுப்பையும் மறந்திருப்பாள். ஏதாவது நல்ல புத்தகங்களை படித்தவாறு சற்று நேரம் கழிப்பாள். அதைக் கண்டு விட்டாளோ சுவர்ணம்பாள் துர்கா ஸ்வரூபத்தை தாங்கியவளாய் "இதென்னடீயிது தேவடியாளாட்டமா! இந்த அலங்காரத் தையல் எல்லாம் தைக்காவிட்டால் முடியாதா? என்று கேட்கிறேன். அடுப்பூதும்பெண் கட்டைக்கு சித்திரம் தீட்டாவிட்டால் கை அழுகிறதோ? போது போகாவிட்டால் போய், அந்த பானை புளியையும் கொண்டு வந்து கொட்டை ஆய்ந்து போட்டால் பிரயோஜனமாகவாவது இருக்கும். கொஞ்சம் இலைகளாவது தைத்துப் போடப்படாதா? நீ எழுதின சித்திரப்படம் தொங்கவிடவில்லையே என்று எங்காத்து சுவர் ஒன்றும் அழவில்லை." என்று சரமாரியாக அடுக்குவாள். அப்பொழுது அச்சிறுமி கொடும்புலியை கண்டு பதரும் மான் குட்டிபோல் நடுநடுங்குவாள். தக்ஷணம் தன் வேலையை அவ்வளவிற்கே நிறுத்திவிட்டு சொர்ணம்பாள் இட்ட கட்டளைப்படி வேலை செய்ய துவங்குவாள். இவ்வித சம்பவம் நடக்காத நாளே கிடையாது.

ஜானகி தன்கணவர் எவ்விடமிருக்கிறார் என்பதை அறியாதவளாய் அவரது க்ஷேம சமாசாரத்தைபற்றி ஒரு தகவலும் அறியாமல் அல்லும் பகலும் கணவனைப்பற்றியே நினைந்து நினைந்து உருகலானாள். மேலும் சுந்தரேசன் அவளை விட்டு பிரியுங்கால் ஜானகி இரண்டு மாதங்கள் கருவுற்றிருந்தாள். கர்பிணியான தாலும், மனவேதனையாலும், மேலும் சக்திக்கு மீறி வேலை செய்வதினாலும் அப்பெண் காற்று மழை, வெயில் அடிக்கப்பட்டு துவண்டுபோன வாழைக்குருத்தைப் போல் துவண்டுவிட்டாள். அம்மங்கையினிடத்தில் சகல சத்குணங்களும் ஒருமிக்க அமைந்திருந்ததாலும், அவளது பாட்டனார் அப்பொழுது அவளுக்கு புகட்டிவந்த நற்புத்தி வாதங்களினாலும் கஷ்டம் வர வர பூதேவியைப் போல் மிகவும் பொருண்மையுடன் சகித்து வந்தாள்.

ஒரு நாள் மத்தியானம் சுவர்ணம்பாள் 500 அப்பளாத்திற்கு மாவு அளந்து பிசைந்து வைத்துவிட்டு, அதை இடித்து உருட்டி அப்பளாம் இடிக்க ஜானகிக்கு கட்டளையிட்டு விட்டு தான் தன் சிநேகிதை பத்முவின் வீட்டிற்கு அரட்டைக் கச்சேரிக்கு சென்றுவிட்டாள். ஆறு மாத கர்ப்பிணியான அச்சிறுமி அவ்வளவு மாவையும் இடித்து உருட்டி முடிக்கவே மிகவும் களைத்துப் போய்விட்டாள். மெள்ளத் தள்ளாடத் தள்ளாட பலகை அப்பளக் குழவி முதலியவைகளைக் கொண்டு வந்து பரப்பிக் கொண்டு ஒரு அப்பள வட்டை பலகைமேல் வைத்து குழவியால் ஒரு அழுத்து அழுத்தினாள்; அவ்வளவுதான். தலை கிருகிருத்து வந்து அவ்விடத்திலேயே தடாலென்று சாய்ந்தாள் அந்தப் பேதைப் பெண். இவ்விதம் நினைவின்றி எவ்வளவு நாழிகை வரைக்கும் படுத்துக் கிடந்தாளோ தெரியாது. சற்று நேரம் பொருத்து சுவர்ணம்பாள் வீடு திரும்பவே, ஜானகி படுத்துக் கிடப்பதைக் கண்டு ஒரே பாய்ச்சலில் அவளிடம் ஓடி வந்து பளார், பளார் என்று அவள் கன்னங்களில் இரண்டறைகள் கொடுத்து நிமிர்த்தி உட்கார வைத்தாள். ஜானகி இன்னும் மயக்கம் தெளியாதவளாய் அடி தாங்காமல் ஹீன ஸ்வரத்தில் கத்தியவாறு மருண்டு மருண்டு விழித்தாள் அச்சமயம் அவ்வனுதை பெண்ணின் நிலைமையை கண்டவர் மனது கரையாமலிராது. ஆனால் அந்த ராட்சசி சுவர்ணம்பாள் மனம் மட்டும் சற்றும் இளகவில்லை.

சுவர்ணம்பாள் அவள் மீது சீரி விழுந்தவளாய் "அடி தடிச் சிறுக்கி! நடு மத்தியானத்தில் தூக்கமென்னடி உனக்கு? இனி

"உங்களை எல்லாம் பிரிய மனஸே வரவில்லை. மாமியைப் பார்த்தால் என் நமஸ்காரங்களை அவளுக்குச் சொல்லு" என்றாள் ஜானகி.

வீட்டைவிட்டொழி கழுதை. இந்த க்ஷணமே தொலைந்து போ" என்று வசை மொழிகளை கூறியவாறு அவளை பிடித்து எழுப்பி நிறுத்த, அவளது கையை பிடித்து கரகரவென்று இழுத்துக் கொண்டு போய் வீதியில் தள்ளி விட்டு தடாலென்று கதவை மூடி தாழ்ப்பாளிட்டுக்கொண்டாள்; அப்பொழுது நடுப் பகல் பன்னிரண்டரை மணியாதலாலும், கோடை காலமாதலாலும் வீதியில் ஜன நடமாட்டமே கிடையாது. அந்த துர்பாக்கியப் பெண் வெகு நேரம் வரைக்கும் ஸ்மரணையற்று வாயில் படியில் விழுந்து கிடந்தாள்.

ஸ்மரணை வந்தவுடன் அப்பெண் எழுந்திருக்க முடியாமல் எழுந்து கதவைத் தட்டி சுவர்ணம்பாளை தன்னை ஏற்கும்படி மிகவும் வேண்டிக்கொண்டாள். நெடு நேரம் வரைக்கும் ஜானகி புலம்பி புலம்பி அலுத்துப் போனாள். வாயில் கதவு திறக்கப்படவே இல்லை. கடைசியில் ஜானகிக்கு ஒரு புது யோசனை உதித்தது. அவ்வூரில் தன்மேல் பக்ஷமாக விருக்கும் ஒரே ஒரு ஸ்திரீயான சாவித்திரி அம்மாமி வீட்டிற்குத் தள்ளாட தள்ளாட நடந்து சென்றாள். அவள் கால்கள் நடக்க மாட்டாமல் கிடு கிடு வென்று நடுங்கின. தலை கிறு கிறுத்து வந்தது. மெள்ள சமாளித்துக் கொண்டு அடிமேல் அடி வைக்கலானாள். அவள் மனம் மட்டும் வேலை செய்ய ஆரம்பித்தது. "சே, இந்த பிசாசுடன் வாழ்வதை விட கிணற்றிலோ குட்டையிலோ விழுந்து சாகலாம். சாவித்திரி மாமியை போய்க் கெஞ்சி கேட்டு மெள்ள குடியாத்தத்திற்கு ரயிலேற்றி விடும்படி கேட்போம்" என்று யோசித்தவாறு சாவித்திரி மாமி வீட்டை அடைந்தாள்.

சாவித்திரியும், அவள் நாட்டுப் பெண் காமுவும் தமாஷாகப் பேசிய வண்ணம் வெல்லச் சீடை உருட்டிக் கொண்டிருந்தார்கள். ஜானகி வாயற்படியண்டை தயங்கி தயங்கி உள்ளே நுழைய சங்கோஜப்பட்டுக் கொண்டு நிற்பதை கண்ட காமுவின் பிள்ளை கோபு "அம்மா ஜானு மாமி வந்துக்கா," என்று ஓடோடியும் வந்து காமுவின் தோளை கட்டிக் கொண்டு மழலை சொற்களில் கூறி இரண்டு பச்சைமா வெல்ல சீடையை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். சாவித்திரி "அடே தடியா பச்சை மாவை தின்னுதே! இப்படி தூக்கிக் கொண்டு ஓடுகிறாயே. இரு, நாளைக்கு காலம்பரம் ஒரு டம்ளர் விளக்கெண்ணெய் போட்டுகிறேன். ஜானகியாவது, இந்த பொழுதில் வருவதாவது. வெல்லச் சீடை திருடுவதற்காக இந்த உபாயமோ" என்று பேரனை மிரட்டினாள்.

அதற்குள் வாசல் கதவிற்கு நேராக உட்கார்ந்திருந்த காமுவிற்கு ஜானகி வாசல்படியண்டை தயங்கி தயங்கி சோர்வுற்று நிற்பது தென்படவே "அம்மா, கோபு சொல்வது நிஜம்தான். அதோ நிற்கிறாளே; சுர்ண அம்மாமி என்னத்தை வைத்து துரத்தினாளோ பாவம்! உள்ளே வர சங்கோசப்பட்டுண்டு நிற்கிறாள்," என்று மாவும் கையுமாக எழுந்தாள்.

இதை கேட்ட சாவித்திரி அந்த பாவி அந்த குழந்தையை படுத்தாத பாடும் படுத்துகிறாள். தாலி கட்டின அகமுடையான் கைவிட்டு சென்றபின் அந்த குழந்தைக்கு கதி யார்? பாவம். போய் உள்ளே அழைத்து வா. போடி ஆறு மாத பிள்ளைதாச்சி இந்த படைக்கரவெயிலில் நம் வீட்டை தேடிவருவானேன்? ஒரு நாளாவது இதற்குமுன் அவள் தனிமையாகத் தெருவில் வந்ததே கிடையாதே" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே காமுவும் ஜானகியின் கையை பிடித்து அழைத்து வந்து உட்கார்த்தினாள். அவளது பரிதாப நிலைமையைக் கண்டு மாமியார், நாட்டுப் பெண் இருவர் உள்ளமும் கரைந்தது.

சாவித்திரி "வா அம்மா ஜானு, என் இப்படி இளைத்து துவண்டுபோயிருக்கிறாய்? உடம்பில் சிவனே இல்லையே; கன்னங்களேன் இப்படி சிவந்து புடைத்து போயிருக்கின்றன? காமு முதல் எழுந்து போய் ஒரு டம்ளர் நீர் மோர் கொண்டு வா. இந்தா ஜானு இந்த வெல்லச் சீடையாவது நாலை வாயில் போட்டுக்கொள்" என்று ஜானுவிடம் ஒரு தட்டு நிரம்ப வெல்ல சீடைகளை நிரைத்து வைத்தாள். காமுவும் ஒரு வெள்ளிடம்ளரில் மோர் கொண்டுவந்து ஜானுவின் கையில் கொடுத்தாள். ஜானுவும் அந்த மோரை வாங்கி குடித்துவிட்டு "மாமி எனக்கு ரொம்ப அலுப்பாக இருக்கு. இப்படிக் கொஞ்சம் படுத்துக் கொண்டே பேசலாமா?" என்று கீழே படுத்துக் கொண்டாள். அதற்குள் சாவித்ரி "காமு, போய் ஒரு பாய் கொண்டுவாம்மா" என்றாள்.

ஜானகி "இல்லை மாமி தேவலை. இந்த ஊரில் நீங்கள் ஒருவர்தான் என்மேல் பக்ஷமாக இருக்கிறீர்கள். நீங்கள் பராசக்தி அவதாரம்தான். அதான் என்னை அறியாமல் என் கால்கள் உங்களிடமே என்னைக் கொண்டுவந்து விட்டன" என்று மேலே பேசமுடியாமல் கண்களில் மளமளவென்று கண்ணீரை உதிர்த்தனள்.

சாவித்திரி "இல்லையடியம்மா நான் ஒருவள் மட்டுமல்ல இந்த ஊரே உன்னை நல்லப்பெண் என்று புகழ்கிறது. உன் அசட்டு அகமுடையானுக்குத் தான் உன்னை வைத்துக் கொண்டு குடித்தனம் செய்யத்தெரியாமல் போயிற்று. அந்த அவலம் சுர்ணம் உன்னை வருத்து, வாயில் போட்டுக் கொள்கிறாள். இந்த வெயிலில் ஏன் இப்படி வந்தாய்? உடம்பு என்ன செய்கிறது?" என்று மெதுவாக விசாரித்தாள். ஜானகியும் கன்னங்களில் கண்ணீர் ஆறாகப் பெருக விஷயத்தை விவரமாகக்கூறினாள். காமுவை சாவித்ரி தன் வயிற்றில் பிறந்த பெண்ணைவிட அதிக பக்ஷத்தோடு நடத்துவதைக் கண்டு அவ்வப்பொழுது ஜானகி ஆச்சரியப்படுவதுண்டு. சாவித்திரி சாக்ஷாத் சாவித்ரி அவதாரம் யென்றே அவள் எண்ணினாள். தனக்கு இந்த மாதிரி மாமியார் அகப்பட்டிருக்கப்படாதா என்று தன் விதியை நொந்துக்கொள்வாள். அவளது உருக்கமான வரலாறைக்கேள்வியுற்று மாமியும், நாட்டுப்பெண்ணும் மிகவும் வருந்தினர்.

சாவித்திரி "மறுபடியும் அந்தச் சண்டாளியின் வீட்டு வாசற்படியில் கால் வைக்காதே. பேசாமல் குடியாத்தத்திற்கு திரும்பிச்செல். உன் அகமுடையான் வந்தால் நாங்கள் உன் இருப்பிடத்தை தெரிவித்து விடுகிறோம். நீ இஷ்டப்பட்டால் இன்றைக்கே மாமாவை உன்னை நல்ல துணைசேர்த்து ஜோலார் பேட்டைமட்டும் சென்று ரயிலேற்றிவிட்டு வர சொல்கிறேன். ஆனால் அவசரமென்ன? இரண்டு நாட்கள் எங்காத்திலிருந்து விட்டுப் பிறகு ஊருக்கு போகலாமே." என்றாள்.

ஜானகி தழ தழத்த குரலில் "வேண்டாம் மாமி உங்களுக்கெல்லாம் இப்பவே ரொம்ப தொந்திரவு கொடுத்துவிட்டேன். நாளைக் காலை தயவு செய்து என்னை ரயிலேற்றி விட்டு விட்டால் மிகவும் உபகாரமாக விருக்கும். ரயில் சார்ஜிற்கு என்னிடம் ஒரு தம்படி காசுகூட இல்லை. இந்தாருங்கள் இந்த மோதிரத்தை வைத்துக் கொண்டு எனக்கு டிக்கட் வாங்கிகொடுத்து விடுகிறீர்களா? என்று தனது விரலிலிருந்த தங்க மோதிரமொன்றை கழட்டி சாவித்ரியம்மாள் பக்கம் நீட்டினாள்.

சாவித்திரியம்மாள் கண்ணை துடைத்துக்கொண்டு மிகவும் வருத்தம் கலந்த குரலில், "வேண்டாண்டியம்மா கையில் போட்டுக்கொள். உனக்கொரு ரயில் சார்ஜிற்குகூட நான் பணம் செலவழிக்கமாட்டேனா. சௌக்கியமாக ஊர்போய் சேர்ந்து பிள்ளையைபெற்றெடுத்துக் கொண்டு, சீக்கிரத்தில் அகமுடையானுடன் சேர்ந்து மகராஜியாக வாழம்மா. இதான் என்னுடைய பிரார்த்தனை. மாமா உள்ளே படுத்துக்கொண்டிருக்கிறார். போய் உன் சமாசாரத்தை சொல்லிவிட்டு வருகிறேன். நீயும் சற்று தூங்கு" என்று அன்பு ததும்பக் கூறிவிட்டு எழுந்து சென்றாள். காமுவும் உருட்டின வெல்லச் சீடைகளை வேகவைத்துக் கொண்டே ஜானுவின் கஷ்ட காலத்தை நினைந்து நினைந்து வருந்தினாள். ஜானு மிகவும் களைத்திருந்தாளாதலால் சற்று கண் அயர்ந்தாள்.

திருப்பத்தூரிலிருந்து குடியாத்தம் செல்லுவதற்கு திருப்பத்தூரில் ரயிலேறி வந்து ஜோலார்பேட்டையில் ரயில் வண்டி மாத்த வேண்டுமாதலால் மறுநாள் காலை வண்டியில் சாவித்திரியம்மாளின் கணவர் சபேசய்யர் ஜானகியை அழைத்துக்கொண்டு ஜோலார் பேட்டை வரைக்கும் கூடச் சென்று அவளை மற்றரயிலேத்தி விட்டு வர புறப்பட்டார். சாவித்திரியம்மாள் ஜானகியை தனது நாட்டுப் பெண் போல் பாவித்து வெடியற் காலமே எழுந்து ஜானகிக்கு காபி, பலகாரம் செய்து கொடுத்து, வழிக்கென்று ஒரு படி வெல்லசீடை, ஒரு டஜன் ரஸ்தாளிப் பழம் எல்லாம் கட்டி கொடுத்து, கர்ப்பவதியின் நெற்றியில் அம்பாளின் குங்குமமும், விபூதியுமிட்டு, தலையைப் பின்னி காமு கொல்லையிலிருந்து பறித்துத்தொடுத்துக்கொண்டு வந்து கொடுத்த மல்லிகைப் பூவையும் வேப்பிலை கொழுந்தையும், ஜானகியின் தலையில் சூட்டினாள்.

ஜானகியும் மிகவும் அடக்க ஒடுக்கமாக அக்குடும்பத்தினரை நன்றியறிதலுடன் ஒரு பார்வை பார்த்து விட்டு, சாவித்திரியம்மாளிற்கு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தாள். ஜானகி "மாமி நீங்களும் மாமாவும் எனக்கு செய்த உபகாரங்களை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன். நான் ஒரு நிர்பாக்கியவதிதான். உங்களுக்குப் பிரதி செய்ய கொஞ்சமும் அருகளில்லை. நான் போய் வரட்டுமா? காமு நான் போய் வருகிறேன். என் சகோதரியைப் போல் நீ என்னிடம் பரிவாக இருதாய். உங்களை எல்லாம் பிரிய வேண்டுமென்றால் மனஸே வரவில்லை. மாமியைப் பார்த்தால் என் நமஸ்காரங்களை அவருக்கு சொல்லு, கோபு! என் கண்ணே நான் போய் வருகிறேன்டா என் தங்கமே!" என்று அவனை வாரி எடுத்து தழுவிக் கொண்டு முத்தமிட்டாள். சபேசய்யர் ரயிலுக்கு நாழியாய் விட்டதென்று அவசரபடுத்தவே, வீதியில் தயாராக நின்றிருந்த பெட்டி வண்டியில் ஜானகி போய் ஏறிக் கொண்டாள். எல்லோர் கண்களிலும் கண்ணீர் துளித்தது.

அந்தப் படுபாவி அவளை அவ்வளவு ஹிம்சித்தும் "மாமியைப் பார்த்தால் என் நமஸ்காரங்களை சொல்லு" என்ற ஜானகியின் அன்பு மொழியை நினைந்து நினைந்து மாமியாரும் நாட்டுப் பெண்ணும் அன்று பூராவும் புகழ்ந்தும், அவள் படும் துயரத்துக்கு வருந்தியும் சம்பாஷித்த வண்ணம் இருந்தார்கள்.

(தொடரும்)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3கேள்விகளுக்கு ரூ. 1. மேல்கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Money back in case of failure. Price Two Dram Phial Rs. 2. V. P. Extra.

S. PAUL & CO., (Dept. S. W.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA

சிறுவர் கதை

★

அடைபட்ட பூதம்

★

மருதப்பா

பல்லாண்டுகளுக்கு முன்பு ஜம்புகேஸ்வரம் என்று ஒரு பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்தில் அம்பலவாணன் என்று ஒரு வணிகர் இருந்தார். அவர் நல்லொழுக்கம் மிகுந்தவர். உலகில் காணும் சகல ஐஸ்வர்யங்களையும்பெற்று முடிசூடா மன்னனாக விளங்கினார். எனினும் குழந்தை இல்லாத குறையே அவரை ரொம்பவும் வருந்தச் செய்தது. ஒரு நாள் அவர் அதிக கவலையுடன் இருந்தார். அப்பொழுது ஒரு பெரியவர் வந்து, "அம்பலவாணரே! நீர் பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று சிவபிரானைத் தரிசித்து வந்தால், ஈசனின் அருளால் உமக்கு புத்திர பேருண்டாகும்" என்றார்.

அதைக் கேட்ட அம்பலவாணர், தமக்கு வழிச் செலவிற்கு வேண்டிய பணத்தை எடுத்துக் கொண்டு தன் பத்தினியுடன் யாத்திரை கிளம்பினார். கொஞ்ச நாளைக்கெல்லாம் யாத்திரையை முடித்துக் கொண்டு தன் பட்டணம் திரும்பி வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் ஒரு ஆசிரமம் காணப்பட்டது. அம்பலவாணர் ஆசிரமத்தையடைந்து அங்கு நிஷ்டையில் உட்கார்ந்திருந்த முனிவரை வணங்கினார். அவரைக் கண்ட முனிவர், இவர் யாரென்றும் எதற்காக இங்கு வந்திருக்கிறாரென்றும் ஞான திருஷ்டியினால் தெரிந்து கொண்டு, "ஏ பக்தா! நீ வந்திருக்கும் காரணத்தை யாம் அறிந்தோம். உன் கவலையை விடு, ஈசன் அருளால் உனக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும்" என்றார்.

அதைக் கேட்ட அம்பலவாணர் சந்தோஷம் கொண்டு, முனிவரை வணங்கி விடை பெற்று தன் பத்தினியுடன் ஊர் வந்து சேர்ந்தார். கொஞ்ச நாளைக்குப் பிறகு முனிவர் சொன்னபடியே அம்பலவாணருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அம்பலவாணர் அநேக தான தருமங்களை செய்து மகிழ்ந்தார்.

குழந்தை வளர் பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து ஐந்தாவது வயதை அடைந்தது. ஒரு நாள் இரவு அம்பலவாணர் நித்திரை செய்துகொண்டிருந்தார். அப்போது தனக்குப் பக்கத்தில் நித்திரை செய்துகொண்டிருந்த குழந்தையை ஒரு பூதம் எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்ததாக கனவு கண்டு விழித்துப் பார்க்க, தனக்குப் பக்கத்தில் படுத்திருந்த குழந்தையைக் காணவில்லை. திடுக்கிட்டு கூச்சலிட்டார். எல்லோரும் விழித்துகொண்டு நாலா பக்கங்களிலும் ஓடி குழந்தையைத் தேடினார்கள். குழந்தையைக் காணவில்லை. அம்பலவாணர் மனம் வருந்தி பலவாறு யோசனை செய்தது. பொழுது விடிந்ததும் பட்டணத்தை விட்டுப் புறப்பட்டு இரவும் பகலுமாய் நடந்து முனிவரின் ஆசிரமத்தை அடைந்து நடந்த விஷயத்தை முனிவரிடம் தெரிவித்தார்.

அதைக் கேட்ட முனிவர் ஞான திருஷ்டியால் விஷயத்தை அறிந்து கொண்டு, அம்பலவாணரைத் தாம் வருமளவும் ஆசிரமத்திலேயே இருக்கும்படிச் சொல்லிவிட்டு, மேரு மலையை அடைந்தார். அம்மலையின் அடிவாரத்தில் நின்று ஏதோ மந்திரத்தை ஜபித்தார். அம்மலை இரண்டாகப் பிரிந்து வழிவிட்டது. அந்த வழியாக குகைக்குள் சென்றார்.

நெடுங் காலமாக அந்த குகைக்குள் அடைக்கப்பட்டிருந்த ஒரு பூதம் முனிவரைக் கண்டதும் அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, "குரு தேவா! அடியேனை க்ஷமிக்க வேண்டும். அடியேன் ஒரு காலத்தில் தங்களுக்குச் செய்த பிழையால் இவ்வளவு காலம் சிறையில் அடைப்பட்டுக் கிடந்தேன். இப்பொழுதாவது அடியேன் செய்த பிழையை மன்னித்து விடுதலை செய்யுமாறு மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றது.

முனிவர், "அம்பலவாணரின் குழந்தையை எதற்காக அபகரித்து வந்தாய்?" என்றார்.

பூதம், "அடியேனை சிறைப்படுத்தி இவ்வளவு காலமாக அடியேனின் நினைவே தங்களுக்கு இல்லாமல் போய்விட்டது. அதை நினைப்பூட்டவே என்ன செய்வதென்று யோசனை செய்தேன். தங்களால் அளிக்கப்பட்ட இந்த குழந்தையை அபகரித்தால் அதை மீட்க தாங்கள் அவசியம் இங்கு வருவீர்கள், அப்பொழுது மன்னிப்பு கேட்டு, விடுதலையடையலாமென்று நினைத்தே குழந்தையை அபகரித்தேன்" என்று சொல்லி, குழந்தையை அழைத்து வந்து முனிவரிடம் விட்டது.

அதைக் கண்ட முனிவர் பூதத்தின் மீது இரக்கங்கொண்டு, "ஏ பூதமே! உன்னை மன்னித்து விடுதலை செய்கிறேன். எமது கண்ணில் படாமல் வேறெங்காகிலும் சென்று பிழைத்துக்கொள்" என்று சொல்லி, பூதத்தை குகையிலிருந்து வெளியில் அனுப்பி விட்டு, குழந்தையை அழைத்து வந்து அம்பலவாணரிடம் சேர்த்து அவரை ஆசீர்வதித்து அனுப்பினார்.

அம்பலவாணர் சந்தோஷம் கொண்டு தம் குழந்தையைத் தூக்கிக் கொண்டு பட்டணம் வந்து சேர்ந்து சுகமே வாழ்ந்து வந்தார்.

சீயாழியில் ரூ 6,000 செலவில் கட்டப்பட்டுள்ள காலஞ்சென்ற மிஸ்டர் **K. சிதம்பரநாத முதலியார்** ஞாபகார்த்த கட்டிடத்தை தஞ்சை கலெக்டர் மிஸ்டர் S. வெங்கடேச்வரன், I. C. S., திறந்துவைத்தார். கட்டிடத்திற்கு பண உதவிசெய்த மிஸ்டர் C. கிருஷ்ணமூர்த்தி முதலியாரும், மிஸ்டர் C. ராமனுத முதலியாரும் படத்தில் மாலைகளுடன் காணப்படுபவர்கள்.



"உஷா"

மெஷின்களையே வாங்குங்கள்.

மலிவானதும், அழுத்தமானதுமான சுதேசி தையல் மெஷின் இதனால் பூரா திருப்தியடையுங்கள்.

உஷா தையல் மெஷின் பிரத்யேக பாகங்களை வாங்குங்கள். எல்லா தயாரிப்பு மெஷின்களுக்கும் தகுந்தவை. எமது பாகங்களை மாற்றிக்கொள்ளலாம். இயந்திரத்தால் செய்யப்படுபவை. உயர் ரகம். திறமையான வேலைப்பாடு. மிகக் குறைந்த விலையில் ஏராளமான சப்ளைகள் கிடைக்கும். உடனே ஆர்டர் செய்யுங்கள்.

ஜே எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட்.,
C/o Mr. பயரிலால் மல்ஹோத்ரா,
1, மலனி ரோட், தியாகராய நகர், மதராஸ்.

7

"சர்வம் நாசம்"

★

வ. வேணுகோபாலன்

"இரண்டு நாட்களாகப் பார்த்து வருகிறேன். அவன் அந்த இளம்பெண்ணின் கன்னிமாடத்துக்குள் இரவில் போகிறான். நடு இரவில் ஒருவரும் அறியாமல் வெளியேறுகிறான்; அப்போதே நேராகச் சயந்தியிடம் செல்லுகிறான்" என்றான் இளந்தத்தன்.

"ஓரிரவில் இரண்டு காதலிகள்! அதிசயமாக இருக்கிறது! ஆமாம், அவள் யார் என்பது தெரியுமா?" என்றான் அவன் நண்பன் அச்சன்.

"அறிந்து தான் சொல்லுகிறேன். அவள் ஏனாதி மும்முடி நாய்கனுடைய பெண். நாய்கன் மிகவும் கிழவன். இதைப்பற்றி அவனுக்குத் தெரியாது. அந்த மாளிகையில் கன்னிமாடம் ஒரு புறம் இருக்கிறது. நாய்கன் இருக்குமிடம் வேறொருபுறம் இருக்கிறது. அல்லாமல் அந்தப் பெண்தான் அம்மாளிகைக்குத் தலைவி. தாய் இறந்துவிட்டாளென்றும் தெரிகிறது. அந்தப் பெண்ணின் பெயர் பத்திரையாம். அவளுக்குத் தோழி ஒருத்தி இருக்கிறாள். மிகவும் அழகுள்ளவள் அவள்; ஆனால் கைம்பெண். பத்திரையின் காதல் இவனுக்கு எவ்வாறு ஏற்பட்டது? என்று எனக்கு விளங்கவில்லை. ஸத்துகனை அவள் தீவிரமாகக் காதலித்து விட்டாள் என்றே தெரிகிறது"

பழி விளையப் போகிறது

"இளந்தத்தரே! நீர் சொல்வதைப் பார்த்தால். அவர்களுக்குக் காதல் ஏற்பட்டு சில நாட்களே ஆகியிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. பாவி! வஞ்சகன்; இதுபோல் எத்தனை மகளிரை அவன் கெடுக்கப் போகிறானோ? இவனை அடக்க நம் சோழ வேந்தனால் முடியவில்லையா? கடந்த சில தினங்களாகப் பௌத்த சங்கத்தில் அவனை நான் பார்ப்பதில்லை. காரணம் இந்தப் புதிய காதல் போலும்! அந்தப் புத்தமித்திரர் ஏதோ உபதேசம் செய்து கொண்டிருக்கிறார். அவரிடம் கூட எனக்குச் சந்தேகந்தான். அங்கே இருக்கும் பௌத்த பிக்ஷுணிகளில் நேர்மையாய் நடந்துகொள்பவர் யார் இருக்கிறார்கள்? அந்த ஸத்துக மந்திர பௌத்த சங்கத்தில் சேர்ந்த பெண்களில் எவ்வளவு பேர் கெட்டுவிட்டார்கள்! பாவம் விளக்கில் சென்று விழும் பதங்கப் பூச்சிகள்போல் மாயப் போகிறார்கள்! இந்த ஸத்துகனின் பௌத்த சங்கத்தால் உலகம் புகழும் பௌத்தமஹா சங்கத்திற்குக்கூடப் பழி விளையப் போகிறது!"

"அச்சா, நான் முன்பே எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன் இப்போதுதான் அரசனுக்குத் தெரிகிறது. ஸத்துக மந்திரத்தின் நிகழ்ச்சிகளெல்லாம் அரசனுக்கும் தெரியும். அதைக் கவனிப்பது நம் பொறுப்புதான். ஸத்துகன், பல்வழியிலும் பௌத்தமதத்திற்கு உடன்படாத செய்கைகளையே செய்கிறான். நாம் எவ்வாறேனும் அவனை அடக்கிவிட வேண்டும். அதுவிஷயமாகவே உன்னை இங்கு அழைத்தேன்"

"இளந்தத்தரே, அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம்; சந்தர்ப்பம் வருகிறது. அவனை அடக்கிவிடலாம்.

"நான் சொல்வதைக்கேள்; அதுதான் அவனை அடக்குவதற்கு நல்ல உபாயம்; ஸத்துகன் பெரும் வஞ்சகன். நாமும் அவனை வஞ்சகம் புரிந்தே அடக்கவேண்டும். இல்லாவிடில் அவனை அடக்கமுடியாது இதோ பார் இந்த முத்து மாலைகளை! இவை உயர்ந்த முத்துக்கள். அரண்மனையைச் சேர்ந்தவை. இவற்றைக் கொண்டு காரியத்தை முடித்துவிடுவதாக ஜயதுங்கன் சொல்லிவிட்டான்—"

"இவனா?"

ஒற்றறிவதில் நிபுணன்

"சொல்வதைக் கேள்; ஜயதுங்கன் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன்; அல்லாமல் இந்நகருக்குப் புதியவன்: ஒற்றறிவதில் நிபுணன். இவனை இந்நகரில் எவரும் அறியார். உனக்கும் இவன் உதவி மிகவும் இன்றியமையாதது" என்று கூறிவிட்டு ஜயதுங்கனை அருகில் அழைத்தான்.

ஜயதுங்கன் அருகில் வந்து நின்றான். அவன் புதியவனாயினும் அவனிடத்தில் அச்சனுக்கு அன்பும் மதிப்பும் அதிகம் உண்டு. தான் செய்யப்போகும் காரியத்தைப்பற்றி ஜயதுங்கன் அவனிடம் கூறினான். "அது நல்ல உபாயந்தான்: மற்றவற்றைப் பின்பு பார்த்துக்கொள்வோம்" என்றான் அச்சன். உடனே ஓர் ஐயம் உண்டாயிற்று அவனுக்கு; "நீ ஸத்துகனைப் பார்த்திருக்கிறாயா?" என்றான். "நான் பார்த்திருக்கிறேன்; அவனைப்பற்றி நன்றாக எனக்குத் தெரியும்" என்றான் ஜயதுங்கன். "நானும் சொல்லியிருக்கிறேன்; ஆனால் அவனுக்கு இவனைத்தெரியாது" என்றான் இளந்தத்தன். "என் விடுதிக்குச்சென்றுவிட்டு, பின்னர் காரியத்தைக் கவனிக்கிறேன்" என்று சொல்லி, முத்துக்கள் வைத்தபெட்டியை எடுத்துக்கொண்டு சென்றான் ஜயதுங்கன்.

"சயந்தியைப்பற்றி உன்னிடம் நான் சொன்னது ஞாபகம்



"நான் பாண்டியநாட்டைச் சேர்ந்தவன்......" என்று கூறிக் கொண்டிருக்கையில் பத்திரை அங்கு வந்து சேர்ந்தாள்.

இருக்கிறதா?" என்றான் இளந்தத்தன்.

"அதைப்பற்றி உமக்குக் கவலை வேண்டாம்; நான் முடித்துவிடுகிறேன்."

"மற்றொன்று; நாம் இப்போது ஸத்துகனைப்பற்றிக் கவனிக்காவிட்டால் துன்பம் யாவும் நமக்கே வரும். அல்லாமல், அந்தக் காளனைப் பிடித்து விடவேண்டும். அரசனுக்கு அப்போதுதான் மன அமைதி ஏற்படும். அவனைப்பிடித்து விட்டால் ஸத்துகனின் வன்மையும் முறியும்."

"காளனைப் பிடிப்பதற்கு உண்டான வழிகளை நான் தேடுகிறேன். சில நாட்களில் பிடித்துவிடுகிறேன். அதற்குள், எத்தனை களவுகள், கொலைகள் நடக்கின்றனவோ?"

"அவனைப் பிடித்துவிட்டால் எல்லாக் களவுகளும், கொலைகளும் ஸத்துக மந்திரத்தின் உண்மைகளும் வெளியாகிவிடும்."

"அதற்கென்ன ஐயம்?"

"அது விஷயமாக இன்று அரசனிடம் பேசவேண்டும்; நீயும் என்னுடன் வா" என்றான். இருவரும் பேசிக்கொண்டே அரண்மனையை நோக்கிச் சென்றனர்.

பத்திரைக் கண்ட காட்சி

ஸத்துகன் கூறிச்சென்ற அன்றைக்கே பத்திரை 'ஸத்துக மந்திரம்' போய்வந்தாள். வசந்தியும் உடன்சென்று வந்தாள். பௌத்த சங்கத்தைப்பார்த்து வந்ததுமுதல் அங்கே, கண்ட காட்சிகள், பத்திரையின் மனத்தைவிட்டு அகலவில்லை. அதைப் பற்றி நினைக்குந்தோறும் அவளுக்கு வியப்பும், அச்சமும் உண்டாயின. அவ்விடத்தை விட்டு வந்தது முதல் அதே ஞாபகமாகவே இருந்தாள்.

பத்திரை:—"வசந்தி, எவ்வளவு பெரிய சங்கம் அது! பௌத்த மஹாசங்கத்தை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால், இந்த சங்கத்திற்கும் அதற்கும் வேறுபாடு அதிகம் இருக்கிறது!"

"ஆம்; பெரிய சங்கமே அது. அங்கே சென்றவுடன் என் உள்ளத்தில் ஒருவித அச்சமும் தூய்மையும் உண்டாகிவிட்டன. அங்கே எவ்வளவு பெண்கள் பிக்ஷுணிகளாக இருக்கின்றனர் பார்த்தாயா?"

"ஆம், பௌத்த மஹாசங்கத்தில் இன்னும் அதிகம். இந்தப் பௌத்த சங்கத்தில் உள்ள பிக்ஷுக்கள் யாவரும் இளம் வயதினர்; பழங்காலத்து முனிவர்களின் தோற்றம் இவர்களைப்போன்று தான் இருக்கும்போலும். பிக்ஷுக்கள், பிக்ஷுணிகள் யாவரும் கழுத்திலிருந்து பாதம் வரையில் ஆடையால் போர்த்தியிருக்கும் தோற்றம் எவ்வளவு அழகு தருகிறது பார்த்தாயா?"

"நிறைந்த அழகுதான்; ஆனால் அவ்விதம் இருப்பது எதற்காக?"

பௌத்த மதப்பிக்ஷுக்களும், பிக்ஷுணிகைகளும் அவ்வாறு இருப்பது இயல்பு; தங்கள் மேனியைப் பிறர் பார்க்காதவாறு அவ்விதம் போர்த்திக் கொள்கின்றனர்."

"ஸத்துகர்கூட பிக்ஷுவின் தோற்றத்தில், காட்சியளித்தாரே! அவர் வடிவம்."...

"அவர் வடிவம் புத்த தேவரது வடிவத்தை எனக்கு ஞாபகம் மூட்டுகிறது. ஏன்? அவரது பரந்தமுகம், கருணையும் ஆழமும் கொண்ட பார்வை; தலைநிறைந்த மயிர் முடி, கழுத்து முதல் பாதம் வரையில் ஆடையால் போர்த்திய தோற்றம். மலர்க்கரம் இரண்டையும் மடிமீது வைத்துத் தியானம் செய்யும் நிலை—ஆ! அவர் மகா புருஷர் என்பதில் ஐயமே இல்லை.

போகப் போகத் தெரிகிறது

வசந்தி:—"பத்திரை, நீ சொல்வது முற்றிலும் உண்மை, புத்த தேவரது அம்சம் என்று கூட நான் எண்ணுகிறேன்; ஏனென்றால், அந்தப் பௌத்த சங்கத்திற்கு அவரே தலைவர். தவிர, அவரிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள். அந்த பௌத்த பிக்ஷுக்கள்! புத்த மித்திர அடிகள் கூட ஸத்துகனிடம் மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறார்" என்று கூறி விட்டுத் தன் மனத்துக்குள், 'நாசத்திற்கு வித்தை விதைத்தாயிற்று, இனி என்ன? தலைக்குமேல் போய்விட்டது. ஸத்துகன் பத்திரை கூறுகிறபடி மஹா புருஷன் தான். ஆனால் எந்த விதத்தில்? போகப்போகத் தெரிகிறது. அவன் தோற்றம் எனக்கு என்னவோ அச்சத்தையே உண்டாக்கிறது! அது கிடக்கட்டும். அந்தச் சங்கத்தில் என்னைப்பார்த்து ஒரு பிக்ஷு பிரமித்து நின்றார்; காதல் பிரமை தான்! அவர் யார் என்பதை அறிய என்மனம் ஆவல் கொண்டது; ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்று. அதனால் என்ன? ஸத்துகசிரேஷ்டியின் பக்கத்தில் தானே அவர் சுற்றிக்கொண்டிருந்தார்! இருக்கட்டும், கைக்குள் இருப்பது எங்கே போய் விடும் என்று எண்ணியிருந்தாள்.

"வசந்தி, என்ன ஆலோசனை செய்கிறாய்? என் மனம், ஸத்துகமந்திரத்திலேயே ஒன்றி விட்டது. மறுபடியும் எப்போது போகலாம் என்று ஏங்குகிறது என் மனம்: துறவு பூண்ட பௌத்த பிக்ஷுக்களின் தோற்றமும் பிக்ஷுகளின் காட்சியும். எவ்வளவு கம்பீரமும் பொலிவும் வாய்ந்து விளங்கின! தவிர அந்த மஹாபிக்ஷு, புத்த மித்திர 'சர்வம் நாசம்' என்பதைப் பற்றிப் பேசினாரே! அதில் எவ்வளவு விஷயங்கள் நிரம்பியிருந்தன!"

'சர்வம் நாசம்'

"ஆம், அந்த மஹாபிக்ஷு, பௌத்தமதக் கருத்துக்களை மிக அழகாக எடுத்துக் கூறினார். அவர் மொழிந்த தருமவுரை என் செவிகளுக்கு அமுதூற்றைப்போல் இருந்தது" என்று சொல்லி விட்டு, 'நல்ல பிக்ஷு தான் அவர். உயர்ந்த கருத்துக்களை மிக எளிதாகச் சொன்னார். அல்லாமல், அவர் முக்காலங்களையும் உணர்ந்தவர் போலும்! இல்லாவிடின், நான் பத்திரையுடன் சென்றதும், அவர், "சர்வம் நாசம்" என்று அபசகுனம்போல் சொல்வாரா? சீ, அவர் மீது குற்றம் இல்லை—அவர் சொல்லும் போது நாம் சென்றோம். ஸத்துகனுக்கும் பத்திரைக்கும் ஏற்பட்ட காதலால், 'சர்வம் நாசம்' என்பது தானே, அதன் கருத்து! என்று எண்ணமிட்டாள்.

"வசந்தி,:—பிக்ஷுக்களிடம் அவ்வளவு பிக்ஷுணிகளும் மிகுந்த, வணக்கத்துடன் நடந்து கொள்கிறார்கள். அவ்விளம் பெண்களைப் பார்க்கும்போது இரக்கமாக இருக்கிறது"

"ஆம், பெண்களின் வாழ்க்கை எந்த விதத்திலும் வணக்கத்துடனேயே இருக்கவேண்டும் என்பது இறைவன் கட்டளை போலும்!"

"ஆனால் அவர்களுக்கு என்ன குறை? முகமலர்ச்சியுடன் இருக்கிறார்களே!"

"புத்தம் சரணம் கச்சாமி, 'தன்மம் சரணம் கச்சாமி, 'சங்கம் சரணம் கச்சாமி' என்று அவர்கள் சொல்லிய வண்ணம் வணங்குவது எனக்கு இன்பமாக இருந்தது."

"ஆம்; அந்தப் பெண்களும் நம்மைப்போலவே. ஆனால், அங்கு இருப்பவர்களில் பெரும்பாலார், கைம் பெண்களே பாவம் அவர்களுக்குத் தான் வேறு வழி இல்லை. பாவம், அந்த இளம் பெண்களில் எத்தனையோ கன்னிகைகளும் உள்ளனர்"

"பத்திரை:—எனக்கு இப்போது தான் ஞாபகம் வந்தது. கைம்பெண்ணாகிய நான் கூட அதில் சேர்ந்து கொண்டால் அடிகளிடம் அறவுரை கேட்டுத் தூய்மை பெறலாம்"

"உனக்கென்ன? நாள்தோறும் என்னுடன் வருகிறாயே! அதில் சேர்ந்து கொண்டாலும் இங்கேயே நீ தங்கவேண்டும்; நீ என்னுடன் இல்லாமற்போனால் எனக்குப் பொழுது போகாது. இங்கிருக்கும் சேடியர் உன்னைப் போல் ஆவார்களா?"

"ஆம், உன்னைப் பிரிந்திருக்க என்னாலும் ஆகாதுதான்"

"இதோ பார், வசந்தி, உன்னிடம் ஒன்று கூறுகிறேன்...என்னால் சொல்வதற்குக்கூட வன்மையில்லை"

"பத்திரை, மனத்திலிருப்பதைச்சொல்லிவிட்டால் அமைதி ஏற்படும்; ஏன் கலங்குகிறாய்?"

"மாலைக்காலம் தோன்றியவுடன் அது ஞாபகம் வந்தது; ஆனால்."

"என்னிடம் சொல்வதற்குக் கூட அச்சமா? உன் இன்பதுன்பங்களை நானும் சேர்ந்து அனுபவிப்பவள் தானே!"

"நேற்று அவர்சென்றபோது நான் உறக்கத்தினின்றும் நன்றாகத் தெளிவு பெறவில்லை; ஞாபகமும் சிறிது இருந்தது. அது விடியற்காலந்தானே?"

"அவர் போகும் போது விடியற்காலந்தான்."

"என்னவோ, கனவு; அது கனவென்று கூடச் சொல்வதற்கில்லை."

"அப்படியானால் என்ன?"

"இல்லை... கனவு தான்; எனக்கு ஞாபகம் இருந்ததோ என்னவோ?"

"என்ன கனவு என்று சொல்லக்கூடாதா?"

(14-ம் பக்கம்)

அழகுத் தெய்வமான

மன்மதன் இளவேனில் ஓய்ந்ததும் பெண்மணிகள் கூந்தலைத் தன் இருப்பிடமாகக் கொண்டான் என்பர் மஹாகவி காளிதாஸர். எந்த அழகிய கூந்தல் தேவதைகள் கண்ணையும் கருத்தையும் பிணிக்குமோ, அக்கூந்தலை வருஷம் முழுவதும் எல்லாப் பருவங்களிலும் கேசவர்த்தினியின் உதவியால் பெறுங்கள். மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். கூந்தலைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

இளமையும், அழகும் கூந்தலுக்குத்தந்து கூந்தலை மனோஹரமாக்குவது கேசவர்த்தினி ஒன்றே.

முக அழகைக் கூந்தலினால் அழகு படுத்துங்கள். உங்கள் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டு அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப்பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

திட்டமான வாழ்க்கை

வ. ரா.

அமெரிக்காவில், மெக்ஸிகோ நாட்டில், பண்டைக் காலத்தில், ஹிந்துக்கள் போய்க் குடியேறினுர்கள் என்பதை என் இளம் பிராயத்தில் படித்தபொழுது எனது குழந்தை உள்ளம் சந்தோஷத்தினுல், குதித்து எழுந்தது. கப்பல் கட்டி, விரிவான சமுத்திரத்திலே, அச்சம் சிறிதுமில்லாமல், பிரயாணம் செய்த பண்டை ஹிந்துக்களின் தற்கால சந்ததியார்கள் இருக்கும் நிலைமையைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

'உலகத்தின் எல்லாப்பகுதிகளிலும் பண்டைக்காலத்தில் ஹிந்துக்கள் குடியேறி நாகரிகத்தைப் பரப்பினுர்களே, இப்பொழுதோ, அவர்களை இந்த நாட்டுக்கு வரக்கூடாது அந்த நாட்டில் பிரவேசிக்கக் கூடாது என்று உத்தரவுகள் போட்டிருக்கிறுர்களே, என்ன அநியாயம்? இவ்வளவு இழிவான நிலைமைக்கு நம்மவர்கள் வந்து விட்டதை ரோஷத்தோடு, ஆராயமாட்டேன் என்கிறுர்களே' என்று நான் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் நண்பரும் வந்து சேர்ந்தார்.

நண்பர்:—இரவிலே உங்களுக்கு சரியான தூக்கமில்லையா?

நான்:-நம்மவர்கள் அடிமைகளாக, திக்கற்ற நிலைமையில் இருந்து துன்பக் கிணற்றில் ஆழ்ந்து கிடக்கும் வரையில், உமக்கும் எனக்கும் ஏனையோருக்கும் என்னமாய், சரியான தூக்கம் வரும்?

நண்பர்:-அப்படியானுல், தூக்கமில்லாமல் போய் நமக்கெல்லோருக்கும் பைத்தியம் பிடிக்கவேண்டியதுதான்.

நான்:-பைத்தியம் பிடித்தாலும் பாதகமில்லை என்று தோன்றுகிறது. பகுத்தறிவு உள்ளவர்கள் என்று பெருமை பேசிக்கொண்டு, எதையும் பகுத்து அறியாமல் எல்லாவற்றையும் கோட்டை விட்டுக்கொண்டிருக்கும் நம்மவர்களின் வாழ்வு பைத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்ததல்ல என்று தோன்றுகிறது.

நண்பர்:-ஏன் இவ்வளவு நிஷ்டூரமாய்ப் பேசுகிறீர்கள்?

நான்:-உண்மைக்கு நிஷ்டூரம் என்று பெயர்கொடுத்து அதை நீர் அழித்துவிட முடியுமா?

நண்பர்:-நிஷ்டூரம் என்ற சொல்லை வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன். கடுமையாய் ஏன் பேசவேணும் என்று கேட்கிறேன்.

மற்ற நாடுகளைப் பாரும்

நான்:-ஏனு? நூறு வருஷத்துக்கு முன், இருந்த இடம் தெரியாமல் இருந்த ஜப்பான், அமெரிக்காவையும் பிரிட்டனையும் ஆட்டி வைக்கும்படியான வல்லமையை இப்பொழுது படைத்திருக்கிறது. அபின் சாப்பிட்டுக்கொண்டு, பண்டை நாகரிகப் பெருமையைப் பற்றி புலம்பிக் கொண்டிருக்கும் நாற்பது கோடி மக்கள் கொண்ட சீனு, ஜப்பானுடைய கிடுக்கியில் அகப்பட்டுக் கொண்டு, தற்சமயம் விழித்துக் கொண்டிருக்கிறது. இது சகிக்க முடிந்த காக்ஷியா?

நண்பர்:-இல்லை; அதற்காக என்ன செய்கிறது?

நான்:—இருபத்தைந்து வருஷங்களுக்குமுன் உலகத்தாரின் அலக்ஷியத்துக்கும் சுமார் மூன்று வருஷங்களுக்கு முன் வரையில் உலகத்தாரின் சந்தேகத்துக்கும் இலக்காயிருந்த ரஷ்யா இப்பொழுது எவ்வளவு பெருமையான ஸ்தானத்தை அடைந்திருக்கிறது? இதற்கான காரணங்களை விசாரிக்க வேண்டாமா?

நண்பர்:—என்ன காரணங்கள்?

நான்:— ரஷ்யாவிலுள்ள பெரும்பான்மையான ஜனங்கள் சொல்லமுடியாத துன்பங்களுக்கு ஆளாகி, அவைகளினின்றும் மீளுவது முடியாதோ என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில், வழியுண்டு என்று புத்திசாலிகளான சிலர் அவர்களுக்கு எடுத்து காண்பித்தார்கள்.

நண்பர்:-ரஷ்யாவில் என்ன நடந்தது? அதை விவரமாகச் சொல்லுங்கள்.

நான்:— அந்தக்கதை, நமக்கு இப்பொழுது தேவை இல்லை. ரஷ்யாவில், சிலராவது, புத்திக்கும் உணர்ச்சிக்கும் பாரிச வாயு ஏற்படாமல், நிலைமையைப் பற்றி யோசித்தார்கள் என்றதை மட்டும் நாம் தெரிந்து கொண்டால் போதுமானது.

நண்பர்:-தெரிந்துகொண்டதாகவைத்துக்கொள்ளுங்கள். பிறகு—

நான்:-நம்மில் சிலராவது, நமது நாட்டின் நிலைமையைப் பற்றி யோசிக்கலாகாதா? ரஷ்யாவிலே தற்காலத்திற்கேற்ற வாழ்க்கைத் திட்டத்தை அமைத்துக் கொண்டார்கள். அதன் அடிவலுவின் பயன் என்ன? ஹிட்லர், ரஷ்யாவை அசைக்க முடியவில்லை.

ரஷ்யாவின் உதாரணம்

நண்பர்:— திட்டமான வாழ்க்கை வேண்டும் என்பதற்கும் அத்தகைய வாழ்க்கையில் எவ்வளவு லாபம் என்பதைக் காண்பிப்பதற்கும் ரஷ்யாவை உதாரணமாக சுட்டிக் காண்பித்தீர்களோ?

நான்-ஆமாம்! பழைய பழக்க வழக்கங்களை என்னமாய் விட்டு விட முடியும் என்று தர்க்க விதர்க்கம் செய்துகொண்டு ரஷ்ய மேதாவிகள் தங்கள் காலத்தை வீணுகக் கழிக்கவில்லை. காலுக்கு உதவாத செருப்பை கழட்டி எரிவது தான் முறை என்று உணர்ந்து, ரஷ்யாவில் காரியம் செய்தார்கள். அவர்கள் செய்த வேலையின் பயனுக, ரஷ்யா அரண் பெற்று விட்டது. தங்கள் மண்ணை அந்நியன் மிதித்து அவமானப்படுத்துவ்தாவது என்ற ஒரே ரோஷத்தில் ரஷ்யர்கள் இப்பொழுது ஆழ்ந்து கிடக்கிறுர்கள்.

நண்பர்:—சரி! அதற்கென்ன இப்பொழுது!

நான்:—நம்ம நாட்டிலே; ஆளுக்கு பஞ்சமா? விளைவுக்கு பஞ்சமா? மூளைக்கு பஞ்சமா? கைவலுவுக்கு பஞ்சமா? ஜன சமுதாயத்தை காப்பதற்கும் அதை முன்னேறச் செய்வதற்கும் தேவையான அத்தனை சாதனங்களும் நம்மவர்களிடம் இருக்கின்றன. ஆனுல், அவைகளை உபயோகப்படுத்தாமல் நம்மவர்கள் இருப்பதைப் பார்த்து, நான் ரொம்பவும் வருந்துகிறேன்.

நண்பர்:—கொஞ்சம் கொஞ்சமாக, எல்லாம் சீர்திருத்தம் ஆகிவிடும். கவலைப் படாதேயுங்கள்.

நான்:—தானே எதுவும் நேருவதில்லை என்பதை நீர் மறந்து விட்டீரா? நேரச் செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் மனிதனைச் சேர்ந்தது. பூகம்பம், எரிமலை போன்ற இயற்கைச் சம்பவங்களுக்குத்தான், மனிதன் பொறுப்பாளி அல்ல. மற்றவைகளுக்கு எல்லாம் மனிதன்தான் பொறுப்பாளி. தங்கள் பொறுப்பைக் கழித்துக் கொண்டு, கடவுளின் பேரிலும் அந்நியர்களின் பேரிலும் பழியைப் போட்டு விட்டு, நம்மவர்கள் சோம்பிக் கிடப்பது நியாயமா என்று உம்மை நான் கேட்கிறேன்.

நண்பர்:—நியாயமில்லை என்று வைத்துக் கொள்ளுவோம்.

மற்றவன் பேரில் பழி

நான்:—கேளும். ஒரு தகப்பனுககு, ஒரு கள் குடிப் பையன் இருக்கிறுன். 'என் பையனை பக்கத்து வீட்டுக்கார பேச்சி முத்து கெடுத்து விட்டான்' என்று தகப்பன் புலம்புவதில் அர்த்தமுண்டா? சொந்த புத்தியும் பொறுப்பும் இல்லாத ஒருவனை, யார் வேண்டுமானுலும் எந்தப் பக்கத்திலும் இழுக்க முடியும் என்பதை அந்த தகப்பனுர் உணர்ந்திருந்தால், பேச்சி

முன்றுதாமரை மார்க்கு பீடி.

S.A.H
ரிஜிஸ்டர் 2221

Rgd. No. 2221.

25 வருஷமாய் தென்னுடு முழுதும் குணத்திலும் மணத்திலும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop:— S. அஹ்மத் உசேன் கோட்டை, சேலம் S.I.R.

தேவக்கோட்டை நகர கவுரவ மாஜிஸ்திரேட் ஸ்ரீ கரு. கதி. நாச்சியப்ப செட்டியார் மனைவி ஸ்ரீமதி பார்வதி ஆச்சி திருவாடானை தாலுக்கா கல்வி ஆலோசனை சபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரே தனவணிக சமூகத்திலிருந்து இப்பதவியை வகிக்கும் முதலாவது ஸ்திரீ யாவார்.

முத்துவின் பேரில் பழியைப் போடாமல், தன் மகனை தானே திருத்த முயன்றிருப்பார். இதுதான் அவர் செய்ய வேண்டிய வேலை.

நண்பர்:—பொறுப்பை தட்டிக் கழிப்பது தகாது, கூடாது என்கிறீர்கள்.

நான்:—மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு பொறுப்பைத் தன் பேரில் போட்டுக் கொண்டு, காரியம் செய்கிறுனே, அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு அந்தஸ்து ஏற்படுகிறது; செயல் வல்லமை அதிகரிக்கின்றது. அதிகாரம், கேட்காமலே தானுகவே, அவனைத் தேடிக் கொண்டு வருகிறது. சகோதர மனிதர்களின் நன்மதிப்புக்கு, அவன் பாத்திரமாகின்றுன்.

நண்பர்:— இவ்வளவும் உண்மை.

நான்:— பொறுப்பை தட்டிக் கழித்த மூடன், பிறனுக்கு எளிதிலே அடிமையாகிவிடுகிறுன். அவனுக்கு இன்பம் கிடையாது. தரித்திரம்தான் அவனை வளர்க்கும் தாரகம். கொட்டாவிதான் அவனுக்கு மிச்சம். எதையும் யாரையும் பற்றி அலக்ஷியமாகப் பேசுவது அவனுடைய துர்க்குணம். இந்த நோய்களுக்குள்ளேதான், நமது போலி அறிவாளிகள், சில நூற்றுண்டுகளாக; விளையாடிக்கொண்டு, வித்தகம் பேசி வந்திருக்கிறுர்கள் இதன் பலன்—?

அந்நியர்களுக்கு-!

நண்பர்:—எப்பொழுது நம்மவர்கள் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டார்களோ, அன்றைக்கே, அவர்களை ஆளும் பொறுப்பும் பாக்கியமும் அந்நியர்களுக்கு கிடைத்தன என்று சொல்ல வருகிறீர்களா?

நான்:—ஆமாம்! பொறி தட்டினுல்போல, நீரே அதை சொல்லிவிட்டீர். ஒரு வேடிக்கைப் பேச்சைக் கேட்கிறீரா?

நண்பர்:-தயார். சிரித்தால், கொஞ்சம் கலகலப்பாய் இருக்கும்போலிருக்கு. ஆவேசம் வந்ததுபோல, எத்தனை நாழிகை பேசிக்கொண்டிருக்கிறது! சிரித்தாலும், காரியத்தில் கண்ணுயிருக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

நான்:—நம்ம தேசத்திலே, ஒருவன் பொறுப்பைக் கழித்துக் கொள்ளும் விநோத வழியொன்றைச் சொல்லுகிறேன், கேளும்.

நண்பர்:—நல்லது!

நான்:—ஒருவனுக்கு, வயலுக்குப் போன இடத்தில், முள் தைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதை அவன் எப்படிச் சொல்லுவான், தெரியுமா? "நான் அடியைப் பார்த்துத் தான் போனேன். இருந்தாலும், முள் வந்து தைத்து விட்டது" என்று வர்ணிப்பான்.

நண்பர், இதைக் கேட்டதும் விழுந்து விழுந்து சிரித்தார். அவரைக் காரணம் கேட்டேன். அவர் சொல்லுகிறுர்.

நண்பர்:—இவர் ஜாக்கிரதையாகப் போனுராம்! ஆனுல் முள் வந்து இவர் காலில், வேணும் என்று தைத்ததாம். நல்ல வேடிக்கை!

நான்:—இங்கே, சூக்ஷ்மத்தைக்கவனியும்! இவர்சாதுவாம்! ஆனுல் முள்ளின் துஷ்டத்தனத்தால், அப்படி நேர்ந்ததாம். வேடிக்கை என்ன என்றுல், முள் வந்ததாம்! முள் எப்படி நகர்ந்து வருமோ, அது கடவுள், அவன், முள் மூன்றுபேருக்கும் தான் தெரியும்.

நண்பர்:—வாஸ்தவம்தான்; தன் பொறுப்பை எவ்வளவு சூக்ஷ்மமாக ஒருவன் கழித்துக் கொள்ளுகிறுன் என்பது தெரிகிறது.

நான்:-பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பார்க்கும் ஜன சமுதாயத்துக்கு எவ்வாறு வல்லமை உண்டாகும்? பொறுப்பை வகித்து செயல் செய்யத் தவறிய நமது சமாஜம் இன்றைக்கு, அந்நியர்களால் அவமதிக்கப்படுவதில், ஆச்சரியமே இல்லை.

நண்பர்:-ஏற்றுக் கொள்ளுகிறேன்,

சாயாதான் அவனுக்கு உயிர்



இந்தியாவில் பிரதான யுத்தவீரன் விமானிதான். அவனுக்கு சாயாதான் உயிர். இன்றைய பூர்ண யுத்த அமளியில் வீரபானம் அதுவே. சாயா மனே உல்லாசமும் கலகலப்பும் கொடுக்கிறது. இந்திய விமானிகள் அதைத்தான் இடைவிடாது கேட்கிறுர்கள். பல இடங்களில் சென்று தாக்கி விட்டு திரும்பும் வெடிகுண்டு விமானங்கள் பேரர் விமானங்கள் இவற்றை ஓட்டிச்செல்லும் விமானிகளும் அதைத்தான் கேட்கிறுர்கள்.

அவர்களது உதாரணத்தைப் பின்பற்றுங்கள். இந்திய தேயிலை பானத்தை அருந்தி யுத்த பளுவையும் கஷ்டத்தையும் மறந்து விடுங்கள்.

மனச்சோர்வு காலங்களில்

இந்தியன் டீயை குடியுங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK-182

காங்கிரஸ் மகாசபைப் சரித்திரம்

மூன்று பாகம் விலை ரூபா 4.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் க்ருதிகள்

[காப்பிரைட்]

I

பல்லவி

நின்னு வினாகாமரி திக்கெவ்வருன்னாரு
நிகிலலோக ஜனனி நன்னுப்ரோத்ஸூடகு ‖ நி ‖

அனுபல்லவி

பன்னக பூஷணுடைன காஞ்சி ஏகாம்ர
பதி மனோஹாரிணி ஸ்ரீ காமாக்ஷி ‖ நி ‖

சரணம்

1. பரம லோபுலனு பொகடி பொகடியதி
பாமருடைய திரிகி திரிகி வேஸாரி-
ஸ்திரமுலேக அதிச பலுடைதி நா
சிந்த தீர்ச்சி வேகமே ப்ரோத் ஸூடகு ‖ நி ‖
2. இலனு நீவலெனே கலதி நீ மஹிம
எந்தனி யோஜிம்ப எவரி தரமம்ம-
பலுக வசம ஆதிசேஷுனி கைனனு
பதித பாவனி நன்னு ப்ரோத்ஸூடகு ‖ நி ‖
3. தாமஸம் பிடுல ஸேயராதி கனு
தல்லினா மொர வினராதா தயலேதா-
காமிதார்த்த பல தாயகி லலிதே-
ச்யாம கிருஷ்ண ஸோதரி கௌமாரி ‖ நி ‖

II

நன்னு ப்ரோத்ஸூடகு—என்னைக் காப்பாற்ற
நிகிலலோகஜனனி—எல்லா உலகத்தையும் படைத்தவளே
நின்னு வினா—மரி-திக்கு எவரு-உன்னாரு—உன்னைத் தவிர வேறு திக்கு யார்?
பன்னக பூஷணுடைன—ஸர்ப்பங்களை ஆபரணமாக அடைந்த காஞ்சி-ஏகாம்ரபதி மனோ ஹாரிணி-ஸ்ரீகாமாக்ஷி—காஞ்சீபுரத்தில் வஸிக்கும் ஏகாம்ரேச்வரர் என்ற உன் பர்த்தாவின் மனதை, அபகரித்தவளே, ஸ்ரீ காமாக்ஷியே!
1. பரம லோபுலனு, பொகடி பொகடி—பரம லோபிகளைப் புகழ்ந்துப் புகழ்ந்து புகழ்ந்து
அதி பாமருடை, திரிகி, திரிகி வேஸாரி—மிகவும் ஞானமற்றவனாக அலைந்து அலைந்து அலுத்து
ஸ்திரமுலேக, அதிசபலுடைதி-ஸ்திர புத்தியில்லாமல் அடிக்கடி மாறும் தன்மையுள்ளவனானேன்
நா சிந்த தீர்ச்சி, வேகமே, ப்ரோத்ஸூடகு—என் கவலையைத் தீர்த்து வேகமாகக் காப்பாற்று

சங்கீத ரத்னாகர சங்கீத கலாநிதி அரியக்குடி ஸ்ரீ டி. ராமானுஜய்யங்கார் ஸ்வரப்படுத்தியது.

2. இலனு; நீவலெனே, கலதி—இவ்வுலகத்தில் உன்னைப் போன்றவர்கள் உண்டா?
நீமஹிம, எந்த அனி, யோசிம்ப எவரிதரமம்ம—உன் மஹிமை எவ்வளவு என்று யோசிக்க யாருக்காவது முடியுமா?
ஆதிசேஷுனிகைனனு, பலுகதரமா—ஆதிசேஷனுக்கும் சொல்ல முடியுமா?
பதிதபாவனி, நன்னுப்ரோத்ஸூடகு—கர்மமார்க்கத்தினின்றும் தவறினவர்களை பரிசுத்தம் செய்கிறவளே, என்னைக் காப்பாற்ற
3. தாமஸம்பு, இடுல ஸேயராது—இப்படி தாமஸம் செய்யக் கூடாது.
இகனு தல்லி நாமொர வினராதா தயலேதா—தாயே என் முறையைக் கேட்கக்கூடாதா, தயவு இல்லையா?
காமித அர்த்த பலதாயகி—வேண்டியவைகளுக்குப் பயனைக் கொடுப்பவளே!
லலிதே, ச்யாம கிருஷ்ண ஸோதரி கௌமாரி—லலிதே, கறுத்ததிருமேனியுடைய கிருஷ்ணனுடன் பிறந்தவளே குமரக் கடவுளின் தாயே!

[காலஞ்சென்ற கிர்த்தனாச்சார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் சரிபார்த்தது]

III

53 மேள ஜன்யம்

ராகம்:—பூர்வி கல்யாணி **தாளம்:—மிச்ர ஏகம்**

ஆ. ஸரிகம. பதபஸ்ர-அ. ஸ்நிதபம கரிஸா

தாளத்தை 'தகதிமி தகிட' (4+3=7) என்று எண்ணிப் போடவேண்டும்.

பல்லவி

1.	ஸா தா ஸ ஸா	; ரீ ஸ ரீ	கா ப ம த ப ம	க ம ரி, ஸா ‖
	நின் னு வி னா	, க ம ரி	திக்கெ. வ ரு .	. . ன்னா ரு ‖
2.	ரிஸ ரித ஸா ஸா	,,	கா க ரி த ப ம	க ம ரிகமாபமகா ரி ‖
	நின் . னு . வி னா	,,	திககெ. வ ரு .	. . ன்னா. . . . . ரு ‖
3.	,,	,,	கா க ரி க த பா	, ம பா, பா
	,,	,,	திககெ. வ ரு	. . ன்னா ரு
	பா தா ப தா, நி	தபபா ப ம கமகமாரி	கா ஸ்நிதபம	க க மா க ரீ ‖
	நி கி ல லோ .	. . . க . ஜ. ன .	னி நன் . . னு .	ப்ரோ . சு ட கு ‖
4.	ரிஸ ரித ஸ ஸா	; ரீ ஸ ரீ	கா க ரி க த பா	, ம பா, பா
	நின் . னு . வி , னா	. க ம ரி	திக் கெ . வ . ரு	. . ன்னா ரு
	ஸ்நிக்ரி ஸ்நி	தா ஸ்நிதபம	கா கமதஸ்ஸ்நிதபமா	கரிபமகரீ ‖
	நி . கில லோ .	. . க . ஜன .	னி நன் . . . . னு	ப்ரோ . சு . ட கு ‖

(நின்னு)

அனுபல்லவி

1.	பா தா ப தா	ஸ்ா ஸா ஸ் ஸ்ா	, ஸ்நிக்ரிஸ்நி	தா ஸ்நீ த ப பா; பம. ‖
	பன்ன க பூ	ஷ ணு டை ன	. கா . . . ஞ்சி .	ஏ . . கா ம் . . ப ர ‖
2.	கா மா . த நி ம	த ஸ் ஸ்நிக்ரி ஸ்ஸ்ா	,,	,, ‖
	பன்ன க பூ .	ஷ . ணு . . . டைன	,,	,, ‖
	; ரீ ஸ் ஸ் நி	த நி த ப பா ப ம	கா ஸ்நிதபம	க ம க ரீ ஸா ‖
	ப தி ம .	னோ. ஹா . . ரி . .	ணி ஸ்ரீ	கா . மா . க்ஷி ‖

(நின்னு)

சரணம்

; க ம ப பா	; ப ம ப ப ம	ப தா ப தா	பா ப ம ப ம க ப ‖
ப ர ம லோ	; பு . ல னு .	பொ க டிபொ	க டி . ய . தி . ‖
ம ரி க ம ப பா	,,	மா தா ம த தா ஸ்நி	த ப ப ப ம ப ம க ப ‖
. . ப ர ம லோ	,,	பொ க டி . பொ . .	க . . டி . ய . தி . ‖
ம ரி க ம க ரீ	ஸா ரி ஸ நி த ஸஸா	; ரீ ஸ ரீ	க ம க ரீ ஸா ‖
. . பா . ம ரு	டை தி . . . ரி கி	. தி ரி கி	வே. ஸா ரி ‖
; க ம த ஸ்ா	; ஸ்ா ரி ஸ்ா	ஸ்நிக்ரிஸ்ஸ்நி	த நி த ப பா ப ம
ஸ் தி ர மு லே	. க அ தி	ச . . . ப லு .	டை . தி . . நா .
; த ரி ஸ் ஸ் நி	தா, ம த நீ	; த நி த மா	கா மா க ரீ ‖
சி ந் . த தீ .	. ர்ச்சி . .	. வே . க மே	ப்ரோ சு ட கு ‖

(நின்னு)

மற்ற சரணங்களும் இதுபோலவே.

நவ நாகரீகம்

★

ஒரு நகை

★

(காசினி எழுதியது)

'சொல்ல மறந்தே போனேனே! உன்னைத் தேடிக்கொண்டு உன் ரங்கூன் சிநேகிதி புஷ்பம் நேற்று சாயங்காலம் வந்திருந்தாள்!' என்று என் அத்தை சொன்னாள்.

மத்தியானக் காபியை முடித்துக்கொண்டு, எங்கள் வீட்டுக் கூடத்தில் எல்லோருமாகப் பேசிக்கொண்டிருந்தோம். பக்கத்தாத்துப் பங்கஜம் அவள் மாமியார், மாலினி, சரோஜா எல்லாரும் வந்திருந்தார்கள்.

'என்ன விசேஷமாம்?' என்று என் அத்தையைக் கேட்டேன்.

'நீ இல்லை என்று சொன்னதும், 'நான் வந்திருந்தேன் என்று சொல்லுங்கோ என்று எனக்கு ஒரு உத்திரவு போட்டு விட்டு, விர் என்று திரும்பிப் போயிட்டா! என்னை மதித்து அவள் எங்கே பேசினாள்?' என்று என்னுடைய அத்தை கோபமாகச் சொன்னாள்.

புஷ்பம், ஜப்பானிய யுத்தம் ஆரம்பித்தபோதே பட்டணம் வந்து விட்டாள். அவள் அகமுடையானுக்கு ஒரு வியாபார ஸ்தலத்தில் பெரிய வேலை. பெண்டாட்டியையும், தன் இரண்டு பெண்களையும் பட்டணத்தில் குடித்தனம் வைத்து, தானும் அவர்களுடன் சிறிது காலம் இருந்துவிட்டுப் போகலாம் என்று இவர்களுடன் அவனும் வந்தான். பட்டணம் வந்ததினமே ஜூரமாகப்படுத்தவன் இரண்டு வாரங்களில் உயிரையே விட்டுவிட்டான். புஷ்பத்தை எனக்கு முந்தியே தெரியும். தற்சமயம் அவள் தனக்குத் தேவையாக இருந்த சில்லரை உதவிகளை எங்களிடமே எதிர் பார்த்தாள்.

'புஷ்பத்தை அப்புடிச் சொல்லலாமா? அவள் ஏதாவது என்னைக் கேட்கலாமென வந்திருப்பாள்; இல்லை என்றதும் போய்விட்டாளாக்கும். எதற்கும் சாயங்காலம் கிளப்புக்குப் போகும் வழியில் அவளைப் போய்ப் பார்க்கிறேன்!' என்றேன்.

'அவள் பெண் உஷா ஒரு புடவை வாங்கி இருக்கேன்; வந்து பாருங்கோ என்று என்னைக் கூப்பிட்டாள். நானும் கூட வரேன்!' என்றாள் மாலினி.

'ஏன், கொணர்ந்து காட்டுவது தானே? நாங்களும் கூடப் பார்க்க மாட்டோமா?' என்று பங்கஜத்தின் மாமியார் வெடுக்கென்று சொன்னாள்.

என் அத்தைக்கும் பங்கஜத்தின் மாமியாருக்கும் புஷ்பத்தைக் கண்டால் அவ்வளவாகப் பிடிக்காது. நிறையப் பணம் இருக்கு, அகம்பாவம் பிடித்தவள் என்பது இவர்கள் எண்ணம். மேலும் ஏதோ வந்த இடத்தில் அவள் அகமுடையான் இறக்க நேர்ந்தது கஷ்டம் தான். இருந்தாலும் சிலபேர்களைப் போல் அப்படி பரிதாபப்படும்படி யுத்தத்தால் இவள் ஒன்றும் கஷ்டத்தை அனுபவிக்கவில்லை. நாங்கள் அனுவசியமாக புஷ்பத்தின் விஷயத்தில் அதிக அநுதாபம் கொண்டாடுகிறோம் என்பது இவர்கள் அபிப்பிராயம். உண்மையில் புஷ்பம் மஹா சங்கோஜி; நன்றாகத் தெரியாத மனிதர்களுடன் பேசவும் பயப்படுவாள். நாங்கள் சாயங்காலமாக புஷ்பத்தின் வீட்டிற்குப் போனோம்.

அவள் நாத்தனார் பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயம் ஆயிருப்பதாயும் பெண்ணுக்கு சீராக ஒரு மாலைவாங்க உத்தேசித்தே என்னைத் தேடி வந்ததாகவும் சொன்னாள்.

'லலிக்கு ஐநூறு ரூபாய்க்கு ஒரு நகை அம்மான் சீராக நான் வாங்கிப்போறேன் என்று அவர் சொல்லிக்கொண்டே இருந்தார். ஏதோ செய்ய வேண்டாமா? ஆறு பவுனுக்குக் குறையாமல் ஒரு சங்கிலி வாங்க உத்தேசித்தேன். கடைக்குப் போகும் வழியில்தான் உங்காத்துக்கு வந்தேன். ஈரட்டாக இதை எடுத்து வந்தேன்!' என்று கூறி, தான் வாங்கி இருந்த சங்கலியைக் காட்டினாள்.

நகை மிகவும் அழகாக இருந்தது. சிறிய, சிறிய பூக்களைக் கோர்த்து மாலை கட்டின மாதிரியில் இருந்தது. ரோஜாப்பூ மாலை மாதிரியில் உருண்டையாக, எந்தப் பக்கம் திருப்பினாலும் புஷ்பமே தெரிந்தது. உண்மையிலே, முதலில் பூக்களைச் செய்து, இவ்விதம் இசைத்திருந்தது என்று எண்ணுகிறேன். கூலி உள்பட முன்னூறு ரூபாய்கள் ஆயிற்றாம். ரொம்பவும் நாசூக்காக இருந்த அந்த மாலையையே புஷ்பத்தின் மருமாளுக்குச் சீராக வாங்கும்படி நாங்கள் சொன்னோம்.

'எங்கே உன் புடவை?' என்றாள் மாலினி. உஷா உள்ளே ஓடிப்போய் புடவையை எடுத்து வந்தாள். உப்பாடாப் புடவைகள் மாதிரியில் மெல்லியதாக இருந்தது. கறுப்பு நிறம்; உடல் முழுதும் சரிகையிலும், வெள்ளி சரிகையிலும், சிறிய சிறிய வட்டங்கள் அங்கங்கே போட்டிருந்தது. அதிகப் பள பளப்பில்லாத வெள்ளி சரிகைக் கரை; புடவைகளையாக இருந்தது. விலையும் அப்படி அதிகமில்லை; தற்கால விலை வாசியை உத்தேசித்து மலிவு என்றே கூறலாம். பதிமூனு ரூபாய்கள் சொச்சம் என்றாள்.

அவசரக் குழம்பு

'அவசரமாகக் குழம்பு தயாராக வேண்டும். பருப்பை வேக வைக்க நேரமில்லை; சமய சஞ்சீவியான ரச வண்டலும் இல்லை, என்றால் என்ன செய்வதாம்?' என்று அன்று ஒரு சிநேகிதி கேட்டாள். இதே சந்தர்ப்பத்தில் மிகவும் சிரமப்பட்டு விட்டதாக முன்பு ஒரு தடவை நீயும் எழுதி இருந்தாய் இல்லையா? வேண்டிய காரத்துக்கு மிளகாய், கடுகு இரண்டு வெந்தயம், பெருங்காயம் இவைகளைத் தாளித்து, தானைப் போட்டு, புளி, உப்பு போட்டுக் குழம்பைக் கொதிக்க வைக்க வேண்டும். முதலில் இரண்டு பிடி பருப்பை வெந்நீரில் ஊற வைக்கவேண்டும். குழம்பு கொதித்துத்தான் வெந்ததும், பருப்பை அமியில் வைத்து சுமாராக அறைத்து, இதில் கொட்டிவிட வேண்டும். நன்றாக கொதித்ததும் இறக்க வேண்டும்.

தேங்காய்ப் பால் கறி

எங்கள் ஊரிலே தேங்காய் விற்கிற விலைக்குப் பால் பிழிந்து கறியில் போட நாங்கள் இப்போது தயாராக இல்லை. ஆனால், உனக்குத்தான் தேங்காய் தோட்டத்தில் காய்ச்சு வருமே! அதிகப் பிஞ்சு இல்லாத முறுங்கைக் காய்களை, குழம்புக்குத் தான் நறுக்குவது போல் நறுக்கிப் பிறகு குறுக்கே இரண்டாகப் பிளந்து கொள்ள வேண்டும். இந்தத் தான்களையும், காரம் வேண்டிய அளவுக்குப் பச்சை மிளகாயையும், இரண்டு வெந்தயம் கடுகு இவைகளை நெய்யும் எண்ணெயுமாகத் தாளித்து, அதில் கொட்டி, சிவக்க வதக்க வேண்டும். ஒரு தேங்காயின் முதல் பாலை அப்படியே எடுத்து விட்டு இரண்டாம் பாலில், பக்குவமாக உப்புப் போட்டு, கொஞ்சம் மஞ்சள் பொடி போட்டு தான்களை நன்றாக வேக வைக்க வேண்டும். கடைசியில் முதல் தேங்காய்ப் பாலையும், அரிஞ்சு சிவக்க வதக்கப்பட்ட வெங்காயத்தையும் இந்தக் கூட்டில் கொட்டி, இரண்டு கொதி விட்டு இறக்க வேண்டும். சற்றுக் காரமாகச் செய்தால் சாதத்துடன் குழம்பு ஸ்தானத்தில் சாப்பிட ருசியாக இருக்கும். காரம் அதிகமில்லாமல் செய்து, கலந்த சாதங்களுடன் தொட்டுக் கொள்ளவும் ருசியாக இருக்கும்.

ஜோதிர்மண்டலம்

சித்திரபானுஸூ பங்குனிமீ

விசாகம்

ஆகாயத்தின் அளவுகோல்

நாம் சாதாரணமாக ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குள்ள தூரத்தை, 4 மைல் தூரம், 200 மைல் தூரம் என்று சொல்கிறோம். ஒரு அறையின் நீள, அகலத்தை அடி, அங்குலங்களால் நிர்ணயிருக்கிறோம். சில சமயங்களில் நாம் சென்னையிலிருந்து, பம்பாய்க்கு எவ்வளவு தூரம் என்றால், 24 மணி பிரயாண தூரம் என்கிறோம். அதாவது நீளத்தினளவை நாம் மணிக்கணக்கில் அறிவிக்கிறோம். ஆதலால் மைல், பர்லாங்கு, கெஜம், அடி, முதலியவை, தூரத்தைத் தெரிவிக்க நமக்கு உபயோகப்படுகின்றன. ஆனால் வானசாஸ்திரிகளுக்கு நமக்குத் தெரிந்துள்ள கெஜக்கோல் பிரயோஜனப்படுவதில்லை. அவர்கள் நம் பூமியிலிருந்து, நக்ஷத்திரங்களின் தூரத்தை கால அளவிலேயே தெரிவிக்கின்றனர். இந்த அளவிற்கு "ஒளி வருஷம்" என்று பெயர் "ஒளி வருஷமே" வான சாஸ்திரிகளின் கெஜக்கோல். இதைக்கொண்டே அவர்கள் வானத்திலுள்ள சூரிய—சந்திர—நக்ஷத்திரங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என அறிவிக்கின்றனர்.

"ஒளி வருஷம்" என்றால் என்ன? ஒளியானது ஒரு வருஷத்தில் எவ்வளவு தூரம் செல்லக்கூடுமோ அந்த தூரத்தை அளவாக வைத்துக்கொண்டு அந்த அளவினால் நமக்கும் ஆகாயக்காக்ஷிகளுக்கும் இடையிலுள்ள தூரத்தை அளந்து சொல்லுவார்கள். ஒளியின் வேகம் அதிகம். அது சப்தத்தை விட அதிவேகமாகச் செல்லும். உதாரணமாக, நாம் ஒருவன் துணி துவைப்பதை தூரத்திலிருந்து பார்ப்போமானால், ஒவ்வொருமுறையும் துணி கல்லில் விழுந்த சிறிது நேரமான பிறகே நமக்கு அதன் ஓசை கேட்கும். அதாவது கல்லின் மேல் துணிவிழுந்த ஓசை நம்மை வந்து அடைய சிறிது நேரம் ஆகிறது.

ஒளியின் வேகம் அதிகம், மிகவும் அதிகம். ஒரு செகண்டில் ஒளியானது 186, 400 மைல் தூரம் செல்லும். இந்த வேகத்தில் ஒரு ஒளிக்கிரணமானது பூமியை ஒரு செண்டில் பல முறை சுற்றி வந்து விடும். இந்த வேகத்தில் ஒரு வருஷத்தில் எவ்வளவு தூரம் ஒளி செல்லக் கூடுமோ அதுவே நமக்கும் நக்ஷத்திரங்களுக்கும் இடையேயுள்ள தூரத்தை அளக்கும் அளவு கோல்!

சூரியனிடமிருந்து நமக்கு ஒளி வந்து சேர சுமார் 10 நிமிஷம் பிடிக்கிறது. ஆனால் நமக்கு அருகாமையிலுள்ள நக்ஷத்திரத்திலிருந்து ஒளி வந்து சேர சுமார் 4 வருஷங்களுக்கு மேல் ஆகும். இதை நாம் 4 ஒளி வருஷ தூரத்திலிருப்பதாக சொல்வோம். இம்மாதிரி பல நக்ஷத்திரங்கள் 50, 100, 1000, புல்லாயிரம் "ஒளி வருஷ தூரத்திலிருக்கின்றன. அதாவது அவற்றிலிருந்து புறப்பட்ட ஒளி நம் பூமியை வந்து சேர 50, 100, 1000, வருஷங்கள் ஆகின்றன. ஸிரியஸ் என்னும் மிகப் பிரகாசமான நக்ஷத்திரம் 8½ ஒளி வருஷ தூரத்திற்கப்பால் இருக்கிறது. வேகா 26 ஒளி வருஷத்திற்கப்பாலும் புனர்வசு (போலக்ஸ்) 32 ஒளி வருஷங்களாகவும் இருக்கின்றன. நமக்கும் நக்ஷத்திரங்களுக்கும் இடையேயுள்ள தூரம் மிகவும் அதிகம். அதை அளக்க சாத்தியப்படுவது 'ஒளி வருஷ'க் கருவியால் தான்.

க்ரஹங்களின் நிலை

புதன்:—சென்ற மாதக் கடைசியில் புதன் கும்பத்தை அடைந்தது. இக் கூட்டத்தைக் கடந்து, இம்மாதம் 9-ம் தேதியன்று மீனக் கூட்டத்தை அடைகிறது. மீனத்தை விட்டு மேஷத்திற்கு மாதக் கடைசியில் மாறுகிறது. இம்மாதம் 22-ம் தேதியன்று (4-4-43) புதன் சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமிக்கிறது. அதற்கப்புறம் சூரியனுக்குப் பின்பே உதயமாகி அஸ்தமிக்கிறது. இம்மாத முதலில் புதனை கீழ்வானில் சூரிய உதயத்திற்கு முன் காணலாம். அதற்கப்புறம் இம்மாதம் இதைக் காண்பது அரிது.

சுக்கிரன்:—இம்மாதமும், சென்ற மாதத்தைப் போலவே சூரியன் மறைந்த பிறகு மேல் வானில் அதிக ஒளியுடன் பிரகாசிக்கும். மாத முதலில் மீனக் கூட்டத்திலும், 6-ம் தேதிக்குப் பிறகு மேஷக் கூட்டத்திலும் இக்கிரஹம் காணப்படும்—சுக்கிரனின் இம்மாதக் கடைசியில் ரிஷபக் கூட்டத்தை அடைந்து, இக் கூட்டத்தின் உன்னத நக்ஷத்திரங்களினிடையே அழகாய் விளங்கும். இதன் ஒளியில் இம்மாதம் அதிக மாறுபாடு கிடையாது. நாள் செல்லச் செல்ல சுக்கிரனின் பிம்ப பாகம் குறைந்து கொண்டே வருகிறது. இதை நாம் ஒரு பைனாகுலர் வழியாகக் கவனிக்கலாம்.

குஜன்:—இம்மாதமெல்லாம் மகரத்திலேயே கழிக்கிறது. இதை விடியற்காலையில் கீழ்வானில் உயரத்தில் காணலாம்.

குரு:—சுக்கிரனிற் கடுத்தாற் போல் குருவே வானின் முக்கிய காக்ஷியாக இம்மாதமும் விளங்குகிறது. இம்மாதமெல்லாம் மிதுனத்திலேயே ஊர்ந்து வருகிறது. மிதுனத்தின் முக்கிய நக்ஷத்திரங்களாகிய காஸ்டர், போலக்ஸ், (புனர்வசு) நக்ஷத்திரங்களுக்குத் தெற்கே வெகு அழகாகப் பிரகாசிப்பதைக் காணலாம்.

சனி:—இம்மாதமும் ரிஷபத்திலேயே நகர்ந்து செல்கிறது. ரிஷபத்தின் முக்கிய நக்ஷத்திரத்திற்குச் சிறிது வடக்கே சனி காணப்படுகிறது. இது முதல் தர நக்ஷத்திரத்தின் ஒளியுடன் இம்மாதம் பிரகாசிக்கின்றது. மாத முதலில் இரவு 12-10 மணிக்கு மாதக் கடைசியில் 10-44 மணிக்கும் சனி அஸ்தமிக்கிறது. குரு மாதக் கடைசியில் இரவு 1-26 மணிக்கு அஸ்தமிக்கிறது.

உரானஸூம்; நெப்டியூனும் முறையே ரிஷபத்திலும், கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன. இம்மாதம் 9-ந்தேதியன்று நெப்டியூன் சூரியாஸ்தமனத்தின்போது உதயமாகிறது. ஆனால் இவ்விரு கிரஹங்களையும் நாம் பார்க்கமுடியாது.

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு கீழே இம்மாதத்திய இராசி சக்கரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பங்குனிமீ 1உ

சூரியன் சுக்கிரன்		சனி	குரு
புதன கேது	3உ—மேஷ—சுக்கிரன் 12உ—மீன—புதன் 16உ—கடக—ராகு 16உ—மகர—கேது 27உ—கும்ப—குஜன் 27உ—மேஷ—புதன் 28உ—ரிஷப—சுக்கிரன்		
			ராகு
குஜன்			

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டைகனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோஇருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லேட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்கியம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும், 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR Oil CHOCOLATES

ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்,
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

காந்தி ஜோஸியர்

திரு வருஷப்பலன் மாதவாரி எழுத ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்கு பதில் ரூ. 1. வி. பி. அணா 5.
ஜனன கால விவரம் OR எழுதும் நேரம் தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி. S.I

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

குண்டலகேசி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

"அந்தக் கொடிய கனவை நான் சொல்லத் துணிவேனா? ஒரு கொலை நிகழ்கிறது."

அச்சமும் ஆச்சர்யமும்

"என்ன? கொலையா?" என்று கூறி அச்சமும் ஆச்சரியமும் கொண்டாள். அவள் தன் இரு காதுகளையும் கைகளால் பொத்திக் கொண்டாள்.

"வசந்தி, நீ, அதை மறந்துவிடு. இனி அதைப்பற்றிக் கேட்காதே. பின்பு சொல்லுகிறேன்" என்று அச்சத்துடன் சொன்னாள்.

"பத்திரை, அது உன் கலக்கந்தான். உண்மையில்லாத கனவு. இதற்கா, இவ்வளவு பயம்? இதைப்போல் எத்தனையோ கனவுகளைக் கண்டிருக்கிறேன். நானும்" என்று கூறிவிட்டு, 'என்ன விபரீதங்கள் இனி நிகழப்போகிறதோ? யார் கண்டார்கள்? நான் நினைத்ததற்கும் நடப்பதற்கும் பொருத்தமாகவே இருக்கிறது; ஏதோ பெருந்துன்பம் விளையப்போகிறது என்றே தோன்றுகிறது. இந்தக் கனவு, 'சர்வம் நாசம்' என்பதற்குத்தான் அறிகுறி. யாருக்கு என்ன நாசமோ? விளையப்போகும் நாசத்தை என் கண்கொண்டு பார்க்க வேண்டும் போலும்!' என்று தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

கன்னிமாடத்தின் உள்ளே இவர்கள் இருவரும் உட்கார்ந்திருந்தனர். இவர்களை, வீதியில் இருந்தபடியே ஒருவன் உற்றுப் பார்த்தான். அவன் பார்ப்பது வசந்திக்கு நன்றாகத் தெரிந்தது. உடனே விரைந்து வெளியே சென்று வீதியில் நிற்பவன் யார் என்று பார்த்தாள்: தலையில் நீண்ட பட்டுத் துணி ஒன்றைச் சுற்றித் தலைப்பாகை கட்டியிருந்தான். விநோதமான சட்டை ஒன்றையும் போட்டிருந்தான். கையில் ஒரு பெட்டியிருந்தது. வசந்தி அவனைக் கண்டதும் "யார்" என்று கேட்பதற்குள், அவன் மிகவும் பணிவுடன், "அம்மா, தாங்கள் இம்மாளிகையின் தலைவி தானே!"

அற்புத முத்து மாலை

"இல்லை; உள்ளேயிருக்கிறாள் என் தலைவி. நீ யார்?"

"நான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன்"...என்று கூறிக் கொண்டிருக்கையில் 'பத்திரை அங்கு வந்து சேர்ந்தாள். பத்திரையைக் கண்டவுடன் மிகப் பணிவுடன், "அம்மா, தாங்கள் இம்மாளிகையின் தலைவி தானே!" என்றான்.

"ஆம், நீ, யார்? எதற்குக் கேட்கிறாய்?

"நான் பாண்டிய நாட்டில் இருப்பவன்: கொற்கைத் துறை முகத்திலிருந்து வருகிறேன்; முத்து வியாபாரி நான்."

"முத்து வியாபாரியா? கொற்கைத் துறை முத்துக்கள் இருக்கின்றனவா?"

"இருக்கின்றன; இப்பெட்டியில் உள்ளவை அவை தாம்" என்று கூறிக் கொண்டே பெட்டியைக் கீழிறக்கினான். அவன் பெட்டியைத் திறக்கும் போது, சுற்றிலும் பார்த்து விட்டுப் பின்பே, திறந்தான். அதிலிருந்து அவன் எடுத்த முத்து மாலைகள்! ஆ! எத்தனை ஒளியுடையன. உலகம் புகழும் கொற்கைத் துறையில் விளைந்த முத்துக்கள் அல்லவா அவை? அவற்றைக் கண்டவுடன் ஆவலோடு முத்து மாலை ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்து வியந்தனர் பத்திரையும் வசந்தியும்.

"அம்மா, இம்முத்துமாலைகள், உயர்ந்தவை. இந்நகரில் என் தந்தை ஆண்டு தோறும் முத்து மாலைகள் விற்றுப் போவது உண்டு. அவர் சென்ற வருஷத்தில் இறந்தார். அதனால் நான் விற்கத் தொடங்கினேன். அரச வீதியில் பல மாலைகளை விற்று விட்டேன். இவை தாம் எஞ்சின. இந்த முத்துக்கள் கொற்கைத் துறையிலன்றி வேறு எங்கும் அகப்படா. உலகத்திலேயே சிறந்த முத்துக்கள் இவை தாம் என்று அறிஞர் கூறுவர். நீங்களும் அறிந்திருப்பீர்கள். இம்மாலைகள் ஒவ்வொன்றின் நடுவிலும், பச்சைக் கற்கள் பதிக்கப் பெற்றிருக்கின்றன..." என்று கூறிக் கொண்டே இருந்தான்.

"ஆனால், இம்முத்துமாலைகளை விலைக்கு கொடுப்பாயா?"

"விலைக்குக் கொடுக்கிறேன். ஆனால் ஒன்று. இருட்டி விட்டது; எனக்கும் காரியம் இருக்கிறது. இவ்வூரில் கள்வர் பயம் உண்டென்று கேள்வி; அதனால் இவை தங்களிடமே இன்றிரவு இருக்கட்டும். விடியற்காலை இங்கு வந்து விலையைப் பெற்றுக்கொள்கிறேன். தங்களை நம்புவது போல் வேறு யாரையும் நம்பேன்" என்றான். அவன் மீது மதிப்பும் இரக்கமும் ஏற்பட்டன இருவருக்கும். அவன் முகத்தில் சிறிதும் களங்கமில்லை. பாண்டிய நாட்டாரின் பேச்சாகவே இருந்தது அவன் வார்த்தைகள்.

"அப்படியே செய்; மாலைகளை எண்ணிக்கொள்" என்றாள் வசந்தி.

ஸத்துகன் விஜயம்

"பெரியமாலை, மூன்றும், சிறிய மாலை ஐந்தும் இருக்கின்றன. காலையில் வருகிறேன்" என்று கூறிவிட்டு மறைந்தான் பாண்டியநாட்டு முத்து வியாபாரி. முத்து மாலைகளைப் பெட்டியில் வைத்து எடுத்துக்கொண்டு உள்ளே சென்றனர் இருவரும். முத்து வியாபாரி எந்தப் பக்கம் சென்றான் என்பதை அவர்கள் அறியவில்லை; அந்தக் கவலை அவர்களுக்கு ஏன்?

சிறிது நாழிகைக்கெல்லாம் ஸத்துகன் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் பத்திரையின் உள்ளத்திலிருந்த கலக்கம், சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தது. அப்போது வசந்தி 'நமக்கு இங்கு என்ன காரியம்?' என்றெண்ணியவளாய் அப்புறம் சென்றாள்; ஸத்துகனும் பத்திரையும் விநோதமாகப் பேசியிருந்தனர். ஸத்துகனைப்பற்றி நினைக்க, நினைக்க, திகிலுண்டாயிற்று வசந்திக்கு. கார்மேகத்தைக் கண்ட மயில் போல் ஸத்துகனைக் கண்டதும் குதூகலித்தாள் பத்திரை. ஸத்துகனுக்குச் சமமாக உலகில் வனப்பும் வன்மையும் ஒருங்கே பெற்ற ஆண்மகன் எவனும் இல்லை என்று எண்ணினாள் பத்திரை. அவனுடைய கம்பீரத் தோற்றத்திலும், பேச்சிலும் தன் மனத்தைப் பறிகொடுத்தாள். பலவாறு மனக்கோட்டை செய்து மயங்கினாள். அவளுடைய இன்பம் நிறை மோகப்பார்வையில் அவனும் மயங்கினான். இருவரும் உள்ளம் ஒன்றிய காதலர் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஊழ்வினை இவர்கள் காதலை என்றும் உள்ளதாக ஏன் செய்யக் கூடாது? விநோதமாக இருவரும் பேசிக்கொண்டு கட்டிலில் இருந்தனர். அப்போது வசந்தி மிகுந்த நாணத்துடன் முத்து மாலைகளைக் கொணர்ந்து, "இவை கொற்கைத் துறை முத்துக்களாம்; நம் பத்திரைக்கு இன்று எதிர்பாராவிதமாய்க் கிடைத்தது காலையில்..." என்று கூறிக்கொண்டிருக்கும் போதே அவற்றைக் கண்டு ஸத்துகன் துணுக்குற்றான்.

இம்மாலைகள் இங்கு வந்ததேன்?

"இம்மாலைகள், இங்கு வரக் காரணம் என்ன? சோழராஜனுடைய அரண்மனையைச் சேர்ந்த முத்துமாலைகள் இவை; இதோ புலி இலச்சினை கூட உள்ளதே!"

"என்ன. சோழராஜனுடையதா?" என்று கேட்டுத் திடுக்கிட்டாள் பத்திரை.

"ஆம். அதில் ஐயமே இல்லை. இங்கே இவை எவ்வாறு வந்தன?" ஸத்துகனுக்கு உவகையைத் தருமென்று எண்ணி மாலைகளைக் கொணர்ந்து தந்தாள் வசந்தி; ஆனால் அதற்கு மாறாகப் பெரிய விபத்து நேர்ந்துவிட்டது.

"பாண்டிய நாட்டு வியாபாரி ஒருவன் கள்வர் பயத்திற்காக இரவு இங்கே இருக்கட்டும் என்று சொல்லி வைத்துச் சென்றான். காலையில் வந்தவுடன் விலைக்குத் தருவதாகவும் சொன்னான். இப்போதுதான் அவன் சென்றான்."

"என்ன? இது பெரிய வஞ்சகம்! சோழராஜனுடைய புலி இலச்சினை பொறித்த மாலைகள் இங்கு வருவதற்கு என்ன காரணம்? இவை இங்கே இருந்தால் உங்களுக்கே பெருந் துன்பம் விளையும்; இவற்றை நான் எடுத்துச் செல்கிறேன். ஆனால் என்னிடம் இருப்பது வேறு யாருக்கும் தெரியக்கூடாது."

"காலையில் வியாபாரி வந்து கேட்டால்?"

"வியாபாரியா? அவன் இனி இங்கே வரமாட்டான்; வந்தால் என்னிடம் அனுப்பிவிடு."

"அவ்விதமானால் இது வஞ்சகம் என்று சொல்லுகிறீர்கள்?"

"சந்தேகம் என்ன? ஏதோ காரணம் இருக்கிறது. ஆனால் என்னிடம் இது இருக்கும் வரையில் பயமில்லை. நான் பார்த்துக் கொள்கிறேன்,"

அம்மொழிகளைக் கேட்ட பின்பே பத்திரைக்கு மன அமைதி உண்டாயிற்று. 'தூண்டிலில் மீன் அகப்பட்டது!" என்று தனக்குள் கூறிக்கொண்டே மறைவில் பதுங்கியிருந்த ஐயதுங்கன் வேறு வழியாக வெளிச்சென்றான்.

இடிமேல் இடிவிழுந்தது போல் இருந்தது வசந்திக்கு; "சர்வம் நாசம்" என்பது புத்தனுடைய வேதவாக்கியம் ஆகையால் எல்லாம் உண்மையாகிறது. நாசத்திற்கு அறிகுறி தோன்றுகிறது! என்று எண்ணினாள் அவள். அப்போது தான் பாண்டியநாட்டு முத்து வியாபாரிமீது வசந்திக்குச் சந்தேகம் மூண்டது. எனினும் இளந்தத்தனுடைய ஒற்றன் ஐயதுங்கன் என்பவனே, பாண்டிய நாட்டுமுத்து வியாபாரியாக வந்தவன் என்பதை அவள் எவ்வாறு உணர்வாள்? ஆனால் 'சர்வம் நாசம்' என்ற புத்த வாக்கியம் மட்டும் அவள் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டே இருந்தது.

பல நாட்கள் கடந்தன. ஸத்துகனும் பத்திரையும் மிக மிக நெருங்கிய காதலராயினர். பத்திரையின் தந்தை மும்முடி நாயகனைக் கூட ஸத்துகன் தன் வசப்படுத்தி விட்டான். அதனால் அச்சமின்றிப் பத்திரையுடன் பழகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் வசந்தி எண்ணியபடி எதுவும், விபரீதங்கள் நிகழ வில்லை அது வரையில்.

அடுத்த வாரம்

'காதலி அழுத கண்ணீர்'

"அம்மா, நான் செத்து விடுவேனென்று யார் சொன்னது?"

அன்பே; கோபம் கொள்ளாதே—ஒன்றும் தெரியாத சிலபேர்கள் ஏதோ என்னமோ சொன்னார்களாம்.

ஜம்மியின்
லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல், குலைகட்டி முதலிய நோய்களை அபரிமிதமாய் குணப்படுத்தும். எல்லாவிடங்களிலும் விற்கப்படுகின்றன.

ஜம்மி வெங்கிடரமணய்யா அண்டு சன்ஸ்—மைலாபூர், மதராஸ்.
சப் ஆபீஸ்:—கும்பகோணம். (S.I R.)
பிராஞ்சுகள்:—பம்பாய், கல்கத்தா, லக்நௌ, திருச்சினாப்பள்ளி, பெங்களூர், விஜயநகரம்.

"தமிழர் வீரம்"

3

வீரமும் உயர்தர வாழ்வும்

★

பி. ஸ்ரீ.

"அஹிம்ஸா தர்மக் கொள்கைதான் இந்த நாட்டின் உயர்ந்த கொள்கையென்று பிரசாரம் செய்துகொண்டிருக்கும் காலத்திலே தாங்கள் தமிழர் வீரத்தைக் குறித்துப் பிரசாரம் செய்துகொண்டிருப்பதால் என்ன பயன்?" என்று கிராம நண்பர் கேட்டார். அந்தக் கேள்வியை ஒட்டி நகர நண்பர் பழைய பத்திரிகை ஒன்றிலிருந்து ஒரு குறிப்பையும் வாசித்துக் காட்டினர்.

அந்தக் குறிப்பு வருமாறு:—"ராஜ புத்திரர்கள், கூர்க்கர்கள், மகாராஷ்டிரர்கள், பஞ்சாபிகள் முதலிய வீர வகுப்பினர் உள்ள இந்த நாட்டிலே அஹிம்ஸா தர்மக் கொள்கை பலமாக வேரூன்றியிருப்பது வருந்தத் தக்கது என்று கொச்சி திவான் மிஸ்டர் ஏ. எப். டபிள்யூ. டிக்ஸன் வருத்தப்படுகிறார்."

நான் சொன்னேன்:—"உண்மையில், வீரத்திற்கும் அஹிம்ஸா தர்மத்திற்கும் விரோதம் கிடையாது. வீரம் வேர்; அஹிம்ஸா தர்மம் கனி. வீரம் வேரூன்றித் தழைத்தோங்கும் பள்ளத்திலேதான் அஹிம்ஸா தர்மமும் அரும்பி மலர்ந்து பலன் தருவதாகும். பேடிகளுக்கும் அஹிம்ஸா தர்மத்திற்கும் சம்பந்தமே கிடையாது. அவர்கள் அஹிம்ஸா தர்மம் பேசுவது, பாரதியார் சொல்லுகிறபடி 'பேடியர் ஞானப் பிதற்றலே ஒழிய வேறில்லை."

'அது எப்படி?" என்று ஆவலாய்க் கேட்டார் கிராமவாசி. நகர நண்பரும், "தங்கள் அபிப்பிராயம் டிக்ஸன் துரையின் அபிப்பிராயத்திற்கு முற்றும் முரண்படுகிறதே! தாங்கள் பாராட்டும் பழைய வீரத் தமிழர்கள், மகாத்மா காந்தியின் அஹிம்ஸா தர்மக்கொள்கையைப் பாராட்டியிருப்பார்களா?" என்று கேட்டார்.

அதற்கு நான், வீர உணர்ச்சியிலிருந்து தமிழர்கள் தியாக உணர்ச்சியும் நீதி உணர்ச்சியையும் பெற்றிருந்ததை ஞாபகப்படுத்தி விட்டு மேலும் சொன்னேன்:—"நியாய உணர்ச்சியைத் தான் அவர்கள் எவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்திருந்தார்கள்! போர் தொடங்குவதற்கு முன் பசுக்கள், பசுக்களைப்போன்ற சாதுக்கள், பெண்கள், குழந்தைகள் முதலியோரைப் போர் நடக்கப்போகும் பிரதேசத்திலிருந்து விலகிப் போய் விடும்படி முன் கூட்டியே எச்சரிக்கை செய்வார்கள். ஆயுதம் இழந்தவனையும், சரியான ஆயுதம் எடாதவனையும், மனம் சோர்ந்து போனவனையும் கூட அவர்கள் கொல்ல மாட்டார்களாம். பிள்ளையில்லாதவனையும் கொல்ல மாட்டார்களாம். இப்படிப்பட்ட தர்ம யுத்தம் தான் அந்தக் காலத்தில் எப்போதும் நடந்ததென்று நான் சொல்ல வரவில்லை. ஆனல் இப்படி ஒரு யுத்தம் நடைபெறக் கூடுமென்று இந்த இருபதாம் நூற்றாண்டு நம்புவதற்கும் தயாராயில்லையே! தமிழர்கள் பழைய காலத்தில் வீர வாழ்க்கையால் ஒழுக்க வாழ்வு பெற்றார்கள்; உயர்தர வாழ்வு பெற்றார்கள் என்பதற்கு அவர்களுடைய தர்ம யுத்த முறைகளும் சாட்சியாகும்."

இப்படி நான் சொன்னதும் நகர நண்பர் சிரித்துக்கொண்டே, "தர்ம யுத்தம் வேறு; யுத்தமே கூடாதென்று சொல்லும் அஹிம்ஸா தர்மம் வேறல்லவா? 'அஹிம்ஸை' 'அஹிம்ஸை' யென்று சொல்லிக்கொண்டிருந்த அறிவாளிகளும் சாதுக்களும் யுத்த களத்தையே கண்டிருக்க மாட்டார்கள். தமிழ் நாட்டுப் போர் வீரர்களோ யுத்த தர்மம் தெரிந்து சில தர்ம யுத்த முறைகளைக் கையாண்டிருக்கலாம்; ஆனல் இந்த யுத்த தர்மத்திற்கும் அஹிம்ஸா தர்மத்திற்கும் என்ன சம்பந்தம்"? என்று கேட்டார்.

அப்போது கிராமவாசியும் "நண்பர் சொல்வது என் புத்தியிலும் சரியாகவே படுகிறது. அஹிம்ஸா தர்மத்திலே சிறந்து விளங்கிய சான்றோர்களெல்லாம் பெரும்பாலும் ஜைன பௌத்தர்களான துறவிகளாகத் தானே இருந்திருக்க வேண்டும்"? என்று ஒரு கேள்வி போட்டார்.

உடனே நகரவாசி, "சான்றோரா? நான் அப்படி ஒரு வார்த்தையைக் கேட்டதில்லையே!" என்றார்.

"அறிவு ஒழுக்கங்களால் சிறந்து விளங்கும் பெரியோர்களைச் 'சான்றோர்' என்று சொல்லுகிறார்கள். ஒரு காலத்தில் இந்தச் சொல்லுக்கு 'வீரர்' என்று பொருள்" என்று நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, நகர நண்பர் குறுக்கிட்டு, "பழைய காலத்தில் சான்றோர்கள் 'சாண்டோ'க்களாக இருந்தார்களா?" என்று வேடிக்கையாகக் கேட்டார்.

அதற்கு நான் சொன்னேன்:- "சான்றோர்கள் 'சாண்டோ'க்கள் மட்டுமல்ல: போர்க்களத்திலே அமைதியோடு, இதயம் 'படபட' வென்று பறை சாற்றாத நிலையில், முன் வைத்த காலைப் பின் வாங்காது நின்று போர் புரியும் வீரர்களைத்தான் பழைய தமிழ் நாடு 'சான்றோர்' என்று அழைத்தது. வீரத்திற்கு நம் முன்னோர் எவ்வளவு உயர்ந்த பதவி அளித்திருந்தார்கள் என்பது இந்தச் சொல் சொல்லும் கதையிலிருந்தே ஒருவாறு புலனாகும். மெய்யறிஞர் உலகமாகிய போர்க்களத்திலே அமைதியோடு வாழ்க்கைப்போர் நடத்தும் மெய்வீரராவர். 'சான்றோர்' என்னும் சொல் இந்தப்பொருளைக் குறிக்கும் நிலையை அடைவதற்குள் எத்தனை நூற்றாண்டுகள் கழிந்திருக்கவேண்டும்! நாகரிக ஏணியிலே தமிழர்கள் எத்தனைபடி ஏறியிருக்கவேண்டும்! அறிவு ஒழுக்கங்களால் நிறைந்து விளங்கிய தர்ம வீரர்களான சான்றோர்கள் ஜைன பௌத்தர்கள் மட்டுமல்ல; சைவ வைஷ்ணவர்களாகவும் இருந்தார்கள். துறவிகள் மட்டுமல்ல; தவ வாழ்க்கையோடு இல் வாழ்க்கை நடத்திய பெரியோர்களாகவும் இருந்தார்கள். தமிழர்கள் தங்கள் வீர வாழ்விலிருந்து ஒழுக்கம் பெற்றார்கள். அறிவு பெற்றார்கள்; உயர்தர வாழ்வாகிய அஹிம்ஸா தர்ம வாழ்வுபெற்றார்கள் என்பதற்குச் 'சான்றோர்' என்ற சொல்லும் சாட்சி சொல்லுகிறது."

நகர நண்பர் திடீரென்று, "வீரத்திலிருந்தே தமிழர் குணதிசயம் உருவாகி விரிவடைந்ததென்ற கொள்கை யுக்திக்குப் பொருத்தமானதுதான். ஆனல்,..." என்று முடிப்பதற்குள், கிராமவாசி குறுக்கிட்டு, "எனக்கும் இது யுக்திவாதம்" என்று தான் தோன்றுகிறது" என்றார்.

நான் சொன்னேன்:—"இது யுக்திவாதம் மட்டுமல்ல; அனுபவவாதமும்கூட. சுருதி, யுக்தி அனுபவம் என்ற மூன்று ஆதாரங்களாலும் இந்தக் கொள்கையை மெய்ப்பிக்கலாம்."

'மரம் வீங்கு பல் புகழ்'

[மறம்—வீரம். வீங்கு—வீங்குகிற; விரிவடைகிற. பல்—பல.]

என்று பழைய கவிஞர் ஒருவர் உபயோகித்திருக்கும் இந்தச் சொற்றொடரைக் கவனியுங்கள். வீரமாகிய வேரிலிருந்து பலவிதமான புகழும் தழைத்து அரும்பிமலர்ந்து கனியும் என்பது இந்தக் கவிஞர் கொள்கையுங்கூட—என்று ஊகிக்கலாமல்லவா? இப்படிப்பட்ட வீரம் பின்னாளில்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்'

[கேளிர்—உறவினர்.]

என்ற சமரஸப் பெருங் கொள்கையாகத் தழைத்தது. 'எல்லாரும் நம்முடைய உறவினர் தான்; சகோதரர்தான்' என்ற சமரஸ சகோதர தர்மம் அஹிம்ஸா தர்மத்திற்கு அடிப்படையாகுமல்லவா?"

உடனே கிராம நண்பர், "ஆனல் இப்படிப் பட்ட வீர உணர்ச்சிகளையும் சமரஸ உணர்ச்சிகளையும் பின்னாளில் சமய உணர்ச்சி கெடுத்துவிட்டதல்லவா? ஜைன பௌத்த சமயங்களை அழித்த சைவ வைஷ்ணவ சமயங்கள் அஹிம்ஸா தர்மத்தையும் அழித்திருக்குமல்லவா?" என்று கேட்டார். "பழைய தமிழர்களின் வீரப் போர்களெல்லாம் பிற்காலத்திலே சமயப் போர்களாகவும், சாஸ்த்திரப் போர்களாகவும் கனிந்து விட்டன அல்லவா?" என்று நகரவாசி சிரித்தார்.

அதற்கு நான் சைவ வைஷ்ணவ பக்தி மதங்கள் ஜைன பௌத்த மதங்களை அழிக்கவில்லை; க்ஷீணகதியுற்று அழிந்து கொண்டிருந்த அந்த மதங்களின் ஸாராம்சமான அஹிம்ஸா தர்மத்தை ஸ்வீகரித்துக் கொண்டன. பக்தி வீரத்தை அழித்து விடவில்லை.

'நாம் ஆர்க்கும் குடிஅல்லோம்!
நமனை அஞ்சோம்!'

என்ற பக்திப் பெருங் கொள்கையாக விரிந்து விட்டது பழைய தமிழர் வீரம். இப்படித் தமது கொள்கையை வெளியிட்ட அப்பர் ஸ்வாமிகள் சிறந்த அஹிம்ஸா தர்ம வீரராகத் திகழ்ந்தார். எனவே, வீரத்தின் கனிதான் அஹிம்ஸா தர்மம்" என்றேன்.

தயவு செய்து கவனியுங்கள்!

உங்களுக்கு சப்ளை செய்யும் டாம்கோ கூந்தல் தைலம், ஷாம்பூ-இவைகள் உண்மையான சரக்குகள்தான் என்பதை உறுதிப்படுத்த எல்லா புட்டி வாய்களின் மேலும் மூடிகளுக்குக் கீழாக முத்திரை யொன்று அச்சிட்டிருக்கிறோம். வாங்கும் போது இந்த முத்திரை உடைக்கப்படாமலிருக்கின்றதா வென்று கவனித்து வாங்கவும்.

மூடிக்குக் கீழ் பிரசித்தி வாய்ந்த டயமண்ட் மார்க்கும், ஆரஞ்சு — பொன்னிற முத்திரையும், "A Tata Product" எனும் வார்த்தைகளும் இருக்கின்றனவாவென்று கவனியுங்கள். போலிகளால் மோசம் போகாதிருக்க உங்கள் ரக்ஷை இதுவேயாகும்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.;
டாடாபுரம் & பம்பாய்.

(T H. 3167.)

உங்கள் இஷ்டம் போல்

✡

கஜமுகன்

"என்ன பிழைப்புவேண்டியிருக்கிறது! பைசாக்குப் பிரயோஜனமில்லை, ஏதோ ஒன்றை எழுதினேம் நாலுகாசு வந்தது என்று கிடையாது மூளையைச் செலவழித்து, கையை வலிக்கப் பத்துப் பக்கங்கள் எழுதி, அதை அனுப்புவதற்கு நாலு பேரிடம் நாலணுவுக்குப் பல்லைக் காட்டி கடன் வாங்கி அனுப்பினுல் கொஞ்சமும் ஈவிரக்கமில்லாமல் "உங்கள் கதையை எடுத்துக்கொள்ள முடியாததிற்கு வருந்துகிறோம்" என்று எழுதித்திருப்பி அனுப்பி விடுகிறார்கள்! பொய் சொல்வதிற்கும் சாமர்த்தியம் வேண்டியிருக்கிறது, என்று அலுத்துக் கொண்டு என் அறையில் உட்கார்ந்திருந்தேன்.

தட தடவென்று என் அறைக் கதவு தட்டும் சப்தம் கேட்டது.

"யாரது?" என்று சீறினேன்.

"நான்தான் கதவைத் திறவுங்கள்."

"நான் என்றால் யார்?"

"என்ன விளையாட்டு இது! கதவைத் திறவுங்களேன். ஒரு அவசரமான காரியம்."

"நீதானு! அப்படி என்ன தலை போகிற காரியம்? இப்பொழுது முடியாது!"

"தலை போகிற காரியம்தான். கதவைத் திறவுங்களேன்." என்று ஓங்கி பலமாகக் கதவு இடிபட்டது.

"சனியன்! எப்பொழுதும் உன் எழவுதானு?" என்று கதவைத் திறந்தேன்.

கதவைத் திறந்ததும் திடுக்கிட்டேன். என் மனைவி ஸ்ரஸ்வதி என்று மில்லாமல் அன்று பத்ரகாளி மாதிரி காட்சி அளித்ததுதான். தலையெல்லாம் கலைந்திருந்தது. பிரமாதமான வேலையில் ஈடுபட்டிருந்தவள் போல் இருந்தாள் அவள்.

"ஏன் இவ்வளவு அவசரம்? எதற்காக இப்படி காட்டேறி மாதிரி தலையைக் கலைத்துக் கொண்டிருக்கிறாய்" என்றேன்.

"அதெல்லாம் கிடக்கட்டும். நீங்கள் என்னமோ பெரிய எழுத்தாளர் என்று சொல்லுகிறீர்களே, (உண்மையில் நான் சொல்லிக்கொண்டதும் கிடையாது, நினைத்ததும் கிடையாது, அப்படிபட்டவனுமல்ல) ஒரு பெண்ணைக் கொலை செய்யணும்! என்ன வழி சொல்லுங்கோ?" என்று கர்ஜிப்பது மாதிரி கேட்டாள்.

"சரி. இன்றைக்கு ஏதோ விநாசகாலம் பிடித்திருக்கிறது." என்று நினைத்துக் கொண்டேன்.

"என்ன யோஜிக்கிறேள்? சட்டுனு சொல்லுங்களேன்"

"ஏதாவது பைத்தியம் பிடித்திருக்கிறதா உனக்கு? எழுத்தாளனுக்கும் கொலைகாரனுக்கும் என்ன சம்பந்தம்? அதுவும் தவிர நீ யாரைக் கொலை செய்யப் போகிறாய்!"

"என்ன சம்பந்தமா! அப்பப்பா! நீங்கள் எத்தனை உயிர்களைக் கொலை செய்திருக்கிறீர்கள்! எத்தனை பேரைத் தூக்கு மேடைக்கு அனுப்பியிருக்கிறீர்கள்! எத்தனை இளம்பெண்களின் மனக் கோட்டைகளை இடித்துச் சிதறவடித்திருக்கிறீர்கள்! எத்தனை இளம் பெண்களை கிழவனுக்கு வாழ்க்கைப் பட்ச் செய்து கண்ணீர் விட்டுக் கதறவடித்திருக்கிறீர்கள்! எத்தனை குரூபமானபெண்களை அழகான வாலிபர்களுக்குக் கல்யாணம் செய்வித்து பெரிய தியாகத்தைச் செய்துவிட்டதாக விளம்பரம் செய்திருக்கிறீர்கள்! எத்தனைக் குடும்பச் சண்டைகளை மூட்டிவிட்டிருக்கிறீர்கள்! தீபாவளி தினத்தன்று இளந் தம்பதிகள் செய்யும் பைத்தியக்காரத்தனத்தையெல்லாம் பகிரங்கப்படுத்தி அவர்கள் மானத்தை வாங்கவில்லையா! இன்னும் என்ன வேண்டும்......?"

"ஸரஸா உனக்கு நன்றாக பைத்தியம் முற்றிவிட்டது. முதலில் வெளியில் போ"

"எனக்கொன்றும் பைத்தியம் முற்றவில்லை. நான் சாதாரணமாகத்தான் இருக்கிறேன். நான் கேட்டதிற்குப் பதில் சொல்லுங்கள்"

"யாரைக் கொலை செய்ய வேண்டும்?"

"ஏன்! கனகத்தைத்தான்?"

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பக்கத்து வீட்டுக் கனகத்தை இவள் எதற்காகக் கொலை செய்ய வேண்டும்? என்று எனக்குப் புரியவில்லை.

"எதற்காக அவள் சாக வேண்டும்?" என்றேன்.

"எதற்காகவா! அவள் பெற்றோர்களே அவளை ஒரு கிழவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்கப் போகிறார்கள். அவள் கல்யாணராமனை மிகவும் காதலிக்கிறாள். மணந்தால் அவனைத்தான் மணப்பேன் இல்லாவிடில் உயிரை விடுவேன் என்கிறாள். அவள் உயிரை விடுவதற்குத்தான் ஒரு வழி வேண்டும்"

"அடப் பாவமே! என் நண்பன் கல்யாணராமனையா காதலிக்கிறாள்? அப்படி ஒன்றும் அவன் என்னிடம் கூறியதில்லையே!", என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, "சே பாவம்! உயிரைவிட வேண்டாம். அவனையே கல்யாணம் செய்து வைத்து விடலாம்" என்றேன்.

"அது எப்படி முடியும்! கல்யாணத்திற்கு ஏற்பாடெல்லாம் ஆகிவிட்டது. இன்னும் இரண்டு நாளில் முகூர்த்தம். அந்தப் பெண் பாவம் போயும் போயும் கிழவனையா கட்டிக் கொள்ள வேண்டும்! கிழவனுடன் வாழ்வதைவிட உயிரை விடுவதே மேல். சட்டென்று ஒரு யுக்தி சொல்லுங்கள் என்றால் என்னமோ கேள்விகளெல்லாம் கேட்டுண்டே போறேளே!"

"ஏன் இப்படி அவசரப் படரே! மனுஷ ஜன்மம் எடுக்கிறதுக்கு எவ்வளவோ கஷ்டப் பட வேண்டியிருக்கு. நீ என்னடான்னு ஒரு உயிரைக்கொலை பண்ண வழி கேட்கிறாய்! பேசாமல் அந்தக் கல்யாணத்தைத் தடுப்பதற்கு வழி தேடலாம். கல்யாணம் எந்த ஊரில் நடக்கிறது?"

"கண்டிராக் கோட்டை என்கிற இடத்தில்."

"இது என்ன கேள்விப்படாத கோட்டையாய் இருக்கே! எந்த ஜில்லாவில்?"

"எனக்குத் தெரியாது. கல்யாணராமனுக்குத் தெரியும்."

"ரொம்ப நல்லதாப்போச்சு! அவனை விட்டே இதைத் தடை செய்தால் போச்சு!"

"அவன் எப்படித் தடை செய்ய முடியும்? கனகத்தின் தந்தைக்குத்தான் அவனைக் கண்டாலே பிடிக்காதே!"

"பிடிக்காவிட்டால் என்ன? கனகத்திற்கு ரகசியமாக ஒரு கடிதம் எழுதச் சொல்லி அவா இரண்டு பேரையும் குளத்தங்கரையில் சந்திக்கச் செய்ய வேண்டும். அப்பவே இரண்டு பேரும் ஒரு முடிவுடன் எங்கே யாவது ஓடிப்போய்ப் பிழைக்கட்டும்."

"கனகத்தின் தாயார் தகப்பனருக்கு அவமானம் வந்து விடுமே!"

"நன்னாத்தான் வரும். வரட்டுமே! அழகான பெண்ணைக் கொண்டுபோய் கிழவனுக்குக் கொடுக்க முடியுமா என்ன?"

"சரி, கனகத்தையும் கல்யாணராமனையும் இவர்களுடன் பின்னால் எப்படி ஒன்றுசேர்க்கிறது?"

"அதெற்கென்ன நாளாவட்டத்தில் இவர்களுக்கும் மகளின் பேரில் உள்ள கோபம் தணிந்து விடும். அவளைத் தேடிப்பிடித்து கல்யாணராமனுக்கே அவளை மணம் செய்வித்து விடுவார்கள்."

"அப்பா! ஒரு உயிர்த் தப்பிற்று!"

"அதற்குத்தான் சொன்னேன் எதற்கும் அவசரம் கூடாது என்று. எதையும் தீர யோஜிக்கவேண்டும். சரி போய் நான் சொன்னபடி செய்யச் சொல்லு கனகாவை. நான் கல்யாணராமனிடம் போய் விஷயத்தைச் சொல்கிறேன்" என்று துண்டை மேலே போட்டுக் கொண்டு கிளம்பினேன்.

"ஹஹ்...ஹஹ்ஹா!" என்று அவள் சிரிக்க ஆரம்பிக்கவே எனக்கொன்றும் புரியவில்லை.

"எதுக்காகச் சிரிக்கிறாய்?" என்றேன்.

உங்கள் பைத்தியக்காரத்தனத்தை நினைத்துத்தான்!"

"யாருக்குப் பைத்தியம்?"

"உங்களுக்குத்தான்."

"ஏன்?"

"ஏன்! உங்கள் சிநேகிதர் கல்யாணராமன் அழகைக் கண்டு பக்கத்து வீட்டு ரம்பை கனகவல்லி காதலித்துவிடவில்லை. இவர்கள் வேறு ஆசாமிகள்."

"இவர்கள் யார்?"

"நான் எழுதிய கதையின் முக்கிய பாத்திரங்கள் இவர்கள். எதையும் தீரயோஜிக்கவேண்டுமென்று என்னைச் சொன்னீர்களே. நீங்கள் இதை யோஜித்தீர்களோ! எல்லாம் பிறருக்குத்தான் பாடம்!"

"சரி, சரி! நீ வேறு கதை எழுத ஆரம்பித்துவிட்டாயா? இனி உருப்பட்டாற்போல் தான். போ அம்மா போ! இத்தனை நாழி என் காரியத்தைக் கெடுத்தாயே அதுவே போதும். நீ போய்த் தொலை!" என்றேன்.

"இங்கே ஒருத்தரும் நின்னுண்டிருக்க இஷ்டப்படவில்லை. நீங்கதானே வீணை என்வாயைக் கிண்டினீர்கள்! அப்பொழுதே அவளைக்கொல்வதற்கு ஒருவழி சொல்லியிருந்தால் இவ்வளவு வம்பு வேண்டாமோல்லியோ? நான் துக்ககரமாக கதையை முடிக்க நினைத்ததை நீங்கள் சந்தோஷகரமாக முடிக்கும்படி பண்ணிவிட்டீர்கள்."

"தேவதை! முதலில் நீ போ. ஆனைப்பட்டவனல்லெம் அம்பலத்தில் நிற்கிறான்! நீ தான் அரங்கத்திலே ஆடி புகழ்பெறப் போகிறாய் போ!" என்றேன்

"உங்களுக்குத்தான் கூடை கூடையாய்ப் புகழ்வருகிறதான்னு சொல்லிக்கிறாளே! அதிலே எனக்கும் கொஞ்சம் கிடைக்காதான்னு தான் பார்க்கிறேன்.' என்று சொல்லி முகத்தை ஒரு திருப்புத் திருப்பிக் கொண்டுபோய் விட்டாள்.

"தொலைந்தது சனியன்!' என்று கூறிக்கொண்டு மறுபடியும் எனது சிந்தனை உலகிற்குப் போய் விட்டேன்.

இதற்குத் தலைப்பு என்ன கொடுப்பதென்று எனக்குத் தெரியவில்லை ஆதலால் 'உங்கள் இஷ்டம்போல்' வைத்துக் கொள்ளுங்கள்.



பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

இது ஒன்றுதான் அசல் விஜய நகரம் மருந்து. குழந்தைகளின் ஈசல் குலைக்கட்டி வியாதிகளுக்கு சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில், கீழவீதி.

திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பகுளம் போஸ்டு.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்

உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

தொண்டைப் புண்ணை குணப்படுத்துங்கள்

தொண்டை புண்பட்டு, கரகரப்பு இருந்தாலும், ஆகாரத்தை விழுங்குவதில் சிரமமேற்பட்டாலும், பெப்ஸ் உட்கொள்ளுங்கள். இக்கிருமிநாச சுவாச மாத்திரைகள் சீக்கிரம் நிவர்த்தியளிக்கின்றன.

வாயில் கரைந்தவுடன் பெப்ஸின் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து சுவாசப் பைக்குச் செல்லுகின்றது. தொண்டைக் குழாய் சமனமடைகின்றது.

வீக்கம் வடிந்து, விஷக்கிருமிகள் ஒழிந்துவிடுகின்றன. பெப்ஸ் ருசிமிகுந்தவை. வாய்கொப்பளிக்கும்மருந்துகளைவிட நீடித்திருப்பவை. எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1-வீதம் விற்கின்றனர். ஏஜெண்டுகள்: மேஸர்ஸ் தாதா & கம்பெனி, பார்க் டவுன், மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்

FREE!

"அமேரிக்கன் நியூ கோல்ட்" அற்புத தயாரிப்பு. உண்மையில் உலகில் 8-வது அதிசயம். இனி பிரபலப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவேயே இந்தியா பூராவும் பிரபலமாய்விட்டது. நிறம் மாறமலிருப்பதற்கு பத்திரிகைகளாலும்; பொதுமக்களாலும் புகழப்பட்டது. நாகரீகமான நகைகளும் செய்யலாம்.

எமது "அமேரிக்கன் நியூ கோல்டை" மேலும் பிரபலப்படுத்த தாற்காலீகமாக 6 தோலா அமேரிக்கன் நியூ கோல்டு, 2 ஜதை வசீகரமான கை வளையல்கள், 2 மோதிரம் சாம்பிள் செட்டாக கொடுக்க உத்தேசித்துள்ளோம். இந்த அனுகூலத்தை நிறுத்துவதற்கு முன் முந்துங்கள்.

இலவசம்: பூரா விவரங்களுடன் கூடிய படங்களுள்ள காட்லாக் இலவசம்.

American New Gold Company,
Post Box 61, (S. M. M.) LAHORE.

(E A B)

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி, கேசவர்த்தினியைக்கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால் கூந்தலையோ வித விதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர், கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகுபடுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலை காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

இனம் வைத்திய வித்தை

பூர்ண ஆரோக்கியம், இன்ப வாழ்க்கை, கலசந்ததிக்கும் வழி.

மதன மஞ்ஜரி பார்மஸி, 184 சைனபஜார், மதராஸ்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R. Srinivasan, B.A

சீரான உலக ஏற்பாடு

மாடம் ஷாங்கேய் ஷேக்கின் கருத்து

சீனத் தலைவரின் மனைவியான மாடம் ஷாங்கேய்ஷேக் சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்தார். சென்ற மாதம் 18-ந் தேதியன்று அவர் அமெரிக்கக் காங்கிரஸில் பேசினார். அப்பிரசங்கம் ரேடியோ மூலம் ஒலி பரப்பப்பட்டது. ஜெர்மனியைத் தோல்வியுறச் செய்வதே முக்கியமென்றும், ஜப்பானை முறியடிப்பது அவ்வளவு முக்கியமல்லவென்றும் ஒரு வித அபிப்பிராயமிருந்து வருவதை அவர் தமது பிரசங்கத்தில் வன்மையாகக் கண்டித்தார். எதிர்கால தலைமுறையை மீண்டும் ரத்தம் சிந்தக்கூடிய மற்றொரு யுத்தத்தில் சிக்காமலிருக்கும் வண்ணம் அமெரிக்கக் காங்கிரஸ் ஓர் ஏற்பாட்டைச் செய்வதில் உதவி செய்ய வேண்டுமென்றும் அவர் கூறினார். யுத்தத்திற்குப் பிறகு சகல நாடுகளும் உள்ள ஒரு கூட்டுச் சபையை நிறுவ வேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார்.

ஜெர்மானியர்களை விட ஜப்பானியர்கள் அவ்வளவு அபாயகரமானவர்களல்லவென்பதை மறுத்து உண்மையை நிரூபிக்கவே தாம் இப்பிரயாணத்தைக் கைக் கொண்டிருக்கிறதாக தெளிவாக்கினார்.

மிட்வே, பவளக்கடல் ஆகிய இடங்களில் அமெரிக்கக்கடற்படைக்குக் கிட்டிய வெற்றிகளைக் குறிப்பிட்டு அவை நேரான துறையில் செய்யக்கூடிய காரியங்களுக்கான நடவடிக்கைகள் என்று கூறிப் பாராட்டினார். கேடுகள் விளைக்கும் எதிரியை முறியடிப்பதில் தாமதமும், கஷ்டமும் ஏற்பட்டாலும் குடல்கனால் போர் இறுதியாக எதிரிகள் முறியடிக்கப்படுவர் என்ற உண்மையையே குறிப்பதாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

பிரசங்க விவரம்

அமெரிக்கக் காங்கிரஸ் முன்பாக மாடம் ஷாங்கேய் ஷேக் செய்த பிரசங்கத்தின் சாரம் ராய்ட்டர் ஸ்தாபனத்தின் மூலம் கொடுக்கப்பட்டது. அது ஏற்கனவே பத்திரிகைகளில் வெளி வந்துவிட்டது. பிரசங்கத்தின் முழு விவரத்தையும் பிரசுரிப்பது சாத்தியமில்லையென்றாலும் அப்பிரசங்கத்தின் சாரத்தை வெளியிடுவது அவசியம். எனவே அவரது பிரசங்கத்தில் அடங்கியுள்ள முக்கிய அம்சங்களை மட்டும் இங்கு வெளியிடுகிறோம்:—

இந்தக் காங்கிரஸில் எப்பொழுது பேசினாலும் அதை ஒரு பாக்கியமென்றே சொல்ல வேண்டும். இப்போதுள்ள இச்சபை உலகத்தின் கதியை உருவாக்கக்கூடிய சபையாதலின் இதில் பேசுவது மிகவும் முக்கியமானதென்றே சொல்ல வேண்டும்.

காங்கிரஸில் பேசுகிறேன் என்றாலும் நான் அமெரிக்கர்களுக்காகத்தான் பேசுவதாகக் கொள்ளவேண்டும். அமெரிக்கர்களின் பிரதிநிதி என்ற முறையில் 77-வது காங்கிரஸ் ஆக்கிரமிப்புக்காரர்கள் மீது போர் தொடுத்தது. 1941-ம் வருஷத்திலே ஜனப் பிரதிநிதிகளின் கடமையில் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்போதுள்ள கடமை இதுதான். யுத்தத்தில் ஜெயிக்க உதவி புரியவேண்டுமென்பது ஒன்று; நிரந்தரமான சமாதானம் நிலவச் செய்து அதைபாதுகாப்பதற்கான வழியை தேட வேண்டும். என்பது இன்னொன்று

என்னுடைய பிரசங்க விஷயத்தைக் குறித்து விளக்கம் செய்வதற்கு முன்பாக என்னுடைய அனுபவத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மனோதைரியம், தேக வலிமை இவற்றில் தான் உண்மையான தேசாபிமானம் இடம் பெற்றிருக்கிறது. உங்களுடைய ஸோல்ஜர் தங்கள் நாட்டையும் வீட்டையும் மறந்து தீரமாகப் போராடுகிறார்கள். அவர்களுடைய மனோதைர்யம் வளர்வதற்கான சகல காரியங்களையும் நீங்கள் செய்ய வேண்டும்.

உலகத்திலுள்ள எல்லா ராணுவத்தையும் விட அமெரிக்க ராணுவத்துக்குத்தான் நன்றாகச் சாப்பாடு போடப்படுகிறது. ஆனால் அந்த துருப்புகள் காலவரையின்றி இப்படியே 'டின்' சாப்பாட்டை உண்டு காலந்தள்ளலாமென்று அர்த்தமில்லை. உலகத்தின் பல பகுதிகளில் பலர் பட்டினியால் வாடுகையில் இது ஒரு பிரமாதமான விஷயமில்லைதான்.

உலகத்தினர் விடுதலைக்காக அமெரிக்கா செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றியும் அந்நாடு இதுவரை செய்திருக்கும் சேவை குறித்தும் மாடம் ஷாங்கே ஷேக் விரிவாகப் பிரஸ்தாபித்தார். மேலும் பேசுகையில் அவர் தெரிவித்ததாவது:—

எதிரியின் பலம்

வெற்றி காண்பதற்கான வகையில் நேச நாடுகள் இப்போது யுத்தத்தை நடத்த வேண்டும். ஸன் ட்ஸி என்பவர் பிரபல சீன ராணுவ தந்திரி அவர் என்ன சொன்னார் தெரியுமா? "ஜெயிக்க வேண்டுமானால் நீங்கள் உங்கள் பலத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதோடு எதிரியின் பலத்தையும் உணர வேண்டும். இதே போல இன்னும் பலர் போதனைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படியிருந்தும் நமது எதிரிகளின் பலத்தைக் குறைத்து மதிப்புப்போடும் முறை நம்மிடமிருக்கிறது.

ஹிட்லர் தான் முதல் எதிரியென்றும், ஜப்பானை முறியடிப்பது இரண்டாம் பட்சமானதென்றும் அபிப்ராயமிருப்பதாகக் காண்கிறது. இது உண்மை விவரங்களை ஆதாரமாகக் கொண்டு தெரிவிக்கப்படும் கருத்தல்ல. ஜப்பானை முக்கியமான, சக்தி வாய்ந்த அபாய நாடாக விருக்கும்படியே விட்டு விடுவதும் நேச நாடுகளின் நலன்களுக்கு உகந்ததல்ல. இன்று ஜப்பான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பிரதேசங்களில் ஜெர்மனியைவிட அதிகமான சாதனங்கள் இருக்கின்றன. இதை நாம் மறக்கக்கூடாது. எத்தனை நாள் நாம் ஜப்பான் பிடித்த பகுதிகளிலுள்ள சாதனங்களைப்பற்றி கவலையில்லாமல் விட்டுவைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு ஜப்பான் வலுவடைந்துவிடும். ஒவ்வொரு நாளும் அமெரிக்கர்களும், சீனர்களும் மடிகின்றனர். ஜப்பானியர்கள் பிடிவாத குணம் படைத்தவர்கள் என்பதையும் நாம் மறக்கக்கூடாது. சீனாவுடன் போர் தொடுத்த முதல் 4½ வருஷ காலத்தில் ஜப்பான் கொலை வெறியுடன் தன்னந்தனியாக நின்று போரிட்டிருக்கிறது. இதுவும் நாம் மறக்கக் கூடிய விஷயமல்ல. மிட்வே, பவளக் கடல் ஆகிய இடங்களில் அமெரிக்கக் கடற்படைக்குச் சித்தித்த வெற்றிகள் சுபசூசகமானதாகுமென்பதில் சந்தேகமில்லை. குடால்கனாலில் சென்ற 6 மாதமாக நடக்கும் யுத்தத்திலிருந்து இறுதியில் கேடு விளைக்கும் சக்திகள் முறியடிக்கப்படும் என்று தெளிவாகிறது. நம் பக்கத்தில் தர்மமும் நியாயமும் இல்லையா? பிரிட்டன், ரஷ்யா, முதலிய வீரம் படைத்த நேச நாடுகளும் நம் உடன் நின்று போரிடவில்லையா? இதற்கிடையே ஜப்பானியரின் அபாயம் இருந்துகொண்டே தானிருக்கிறது. அமெரிக்கப் பிரதிநிதிகள் இந்த யுத்தத்தில் ஜெயித்து சீரான உலகமைப்புக்கு ஏற்பாடுசெய்ய வழி காட்டவேண்டும். நமக்குமட்டுமின்றி எதிர்காலத் தலைமுறைகளுக்கும் நல்ல முறையில் உலகத்தில் ஓர் ஏற்பாடுவேண்டுமென்பதில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். கற்பனையுடன் நின்றுவிடாமல் நாம் சமாதானத்தை உலகத்திலுள்ள எல்லா மனித வர்க்கத்துக்கும் உகந்ததான வகையில் செய்ய வேண்டும். ஏனெனில் தற்கால விக்ஞானங் காரணமாக ஒருவரைப் பாதிக்கும் விஷயம் மற்றவர்களையும் பாதிக்கிறது. சர்வதேச சுதந்திரத்தை இப்போது எல்லோரும் அங்கீகாரம் செய்கிறார்கள். எனவே எல்லா நாட்டினரும் ஒரு கூட்டுச் சபையில் அங்கம் வகிக்க வேண்டுமென்று நாம் தெரிவிக்கவேண்டாமா?

சீன-அமெரிக்க உறவு

சீனாவுக்கும்—அமெரிக்கருக்கும் 166 வருஷங்களாக உறவிருந்து வருகிறது. இது ஒரு போதும் தப்பு அபிப்ராயத்தால் குலைவுறவில்லை. உலகத்திலேயே இது பெரிய சம்பவம். எதிர் காலத்தில் யாரும் இது போல ரத்தஞ் சிந்தும்படியான போரைக் கொண்டு வர முடியாதபடி உலக அமைப்பை செய்வதற்காக நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்கலாமென நம்புகிறோம்.

தேசத்துக்கு ஆள் பலமிருப்பது செல்வம் போலாகும். இதைச் சீனா உணர்ந்திருக்கிறது. இந்தப் பலத்தைப்பெற பல தலைமுறைகளாகின்றன. தனது பொறுப்புகளைச் சீனா தனியாகவே உணர்ந்துகொள்கிறது. உரிமைகளைப்பற்றியோ லாபங்களைப்பற்றியோ அது கவனம் செலுத்தவில்லை. சில்லரை விஷயத்துக்காக முக்கியமானதை விட்டு விட்டு மட்டமான முறையில் நடந்து கொள்ளவும் சீனா தயாராயிராது. உங்களைப்போலவே சீனாவில் நாங்களும் எங்களுக்குமட்டுமின்றி மனித வர்க்கத்துக்கே சீரான உலகஅமைப்பு இருக்க வேண்டுமென்றும் விரும்புகிறோம். எங்களுடைய லக்ஷியங்களைப் பாது காத்து அதை ஸ்தாபித்துப் பராமரிக்க தோல்வி ஏற்படும் என்ற அபாயத்திலும்கூட நாங்கள் போரிட்டதும் உண்டு. காலஞ்சென்ற எங்கள் தலைவர் டாக்டர் ஸன்யாட்ஸென் போதனை காரணமாக எங்களுக்குச் சகிப்புத் தன்மை ஏற்பட்டிருக்கிறது. தோல்வியை ஏற்பதைவிட அபாயத்தைப் பொருட்படுத்தாமல் போரிட்டுத் தோற்பது விவேகம் என்று நாங்கள் கருதுகிறோம். இது 5½ வருஷ காலமாக நடந்த போரில் நாங்கள் கண்ட அனுபவம். மனிதனுடைய சக்தி கஷ்ட தசையிலும் வெற்றி வாழ்விலும் சோதிக்கப்படும். தேசத்தார் விஷயத்திலோ இது இரு மடங்கு உண்மையாகும்.

மாடம் ஷாங்கேய் ஷேக்

ஸெனேட்டில் பிரசங்கம்

அமெரிக்க ஸெனேட்டில் மாடம் ஷாங்கேய் ஷேக் பேசுகையில் தெரிவித்ததாவது:—

ஜனாதிபதி தெரிவித்த 4 சுதந்திரங்களும் எங்களுடைய லட்சியங்களாகும். இந்த லட்சியங்

(அடுத்த பக்கம்)

போர் முனையிலே சேவை செய்யும் கோவேறு கழுதை ஒரு சிறந்த 'வீரன்'. இவ் வீரன் என்றைக்கும் உத்தியோக உயர்வு பெறப் போகிற தில்லை. அப்படியிருந்தும் சற்றும் தளர்வின்றி இது செய்து வரும் வேலை எவ்வளவு முக்கியமானது தெரியுமா? அஸ்ஸாம் காடுகளில் இந்த நாலு கால் வீரர்கள் இல்லாவிட்டால் ஒன்றுமே நடக்காது. சாதாரண கோவேறு கழுதை 200 பவுண்டு எடையுள்ள பளுவைத் தூக்குகிறதென்றால் அதன் முத்தண்ணுவான பீரங்கிக் கழுதைக்கு 240 பவுண்டு எடை ஒரு லக்ஷியமில்லை!

வீரனுக விளங்கும் கோவேறு கழுதைக்கும் அதற்குச் சகாக்களாகவிருக்கும் இரண்டு கால் வீரர்களுக்கும் பல விஷயங்களில் ஒற்றுமை உண்டு. இதுவும் ஒரு ஸோல்ஜரைப் போலவே பயிற்சி பெறுகிறது. பீரங்கிக் கழுதைகள் தவிர முன்னணிக் கழுதைகள் வேறு இருக்கின்றன. இவை முன்னணித் துருப்புகளைப்போலவே விசேஷப் பயிற்சியளிக்கபடுகின்றன. அவர்களைப்போலவே இவைகளுக்கும் நாட்டை விட்டு போய் வாழ்வதில் பயிற்சி. ஆனால் சாப்பாடுமட்டும் ஒவ்வொரு நாளும் இவைகளுக்கு வயிருர இருக்க வேண்டும். அதனுல் தான் தினசரி அவற்றிற்கு ஏழு எட்டு பவுண்டு தானியம் கொடுக்கப்படுகிறது. கீழ் முனையில் வேலை செய்யும் கோவேறு கழுதைகளில் பெரும்பாலானவை இந்தியாவில் பிறந்தவை. ஆனால் தென்னுப்பிரிக்காவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் சில வந்திருக்கின்றன.

அச்சம் நீங்க

ஒவ்வொரு கோவேறு கழுதைக்கும் ஸைன்யத்தில் சேரும்போது, ஸோல்ஜரைப்போலவே சில வாரம் பிரதமப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி எல்லாம் சுமையைத் தாங்குவதிலும் சேணம் போட்டுக் கொண்டிருப்பதிலும் தான். அடுத்தாற்போல் சிறிய தடைகளை மீறிச் செல்வதில் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்தச் சமயத்தில், சப்தத்தைக் கேட்டு வெருளாமல் இருக்கவேண்டுமென்பதற்காக, தகர டப்பிகளைக்கொண்டு அதனிடம் சப்தம் செய்யப்படுகிறது. அதன் பிறகு இது போர்ப் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெறுகிறது. அதன் காலடியிலிருந்தே யந்திர பீரங்கிகள் ஒலிக்கும். அருகிலேயே வெடிகள் வெடிக்கும். அதன் நீண்ட செவிகளைத் தொட்டதும் தொடாததுமாக குண்டுகள் பறக்கும். ஆனால் இந்த வீரர் இதற்கெல்லாம் அஞ்சாமல் அமைதியாகவே நிற்பார்!

கிழக்குப் போர்முனையில் காடுகளும் மோசமான ரஸ்தாக்களும் அதிகமாய் இருப்பதால் மோட்டார்மூலம் போக்குவரத்தை நடத்துவது மிகவும் கஷ்டம். அதனுல் அங்கே கோவேறு கழுதைகள் ஆயிரக் கணக்கில் உபயோகிக்கப்படுகின்றன. மனிதன் போகக்கூடிய இடத்திலெல்லாம் அவை போகும். ஆனுல் மனிதனைப்போல் அவை சுலபத்தில் ஆயாசமடையா. அவற்றின் வேகம் கொஞ்சம் குறைவு தான்; மணிக்கு சுமார் 3-மைல் தான் செல்லும். ஆனுல் நிச்சயம் ஒரு நாளைக்கு 40 மைல் வரையில் செல்லும். அவற்றின் சராசரிக் கணக்கு பத்து மைல் தான். இந்தக் கணக்குப்படி அவை எத்தனை நாளுக்கு வேண்டுமானுலும் பிரயாணம் செய்யும்.

★

உங்கள் சொந்த அபிப்ராயத்தையா கேட்டேன்?

கட்சிக்காரரைப் பார்த்து வக்கீல், "என்னுடைய உண்மையான அபிப்பிராயத்தைக் கேட்டால்..." என்று ஆரம்பித்தார்.

கட்சிக்காரர்:—உங்க சொந்த அபிப்ராயத்தைக் கேட்க வரவில்லை ஸ்வாமி! தொழில்படி நீர் சொல்லவேண்டியதைச் சொல்லித் தொலையும்!

* * * *

வயிற்றிலா பல்?

பக்கத்து வீட்டு விசாலத்துக்குக் கல்யாணமாம். யாரோ 'எக்ஸ்ரே' பட நிபுணராம். அவருக்குக் கொடுக்கப் போகிருளாம்" என்ருள் மனைவி.

"ஆமாம்! அந்தப் பெண்ணுக்கு வயிற்றில் எத்தனை பல் வரிசை என்பதைப் பார்ப்பதற்காகவே இந்த ஏற்பாடோ என்னமோ!" என்ருன் கணவன்.

* * * *

சென்றவார நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

விலை		பக்கங்கள்
1-அணு முதல்	1½-அணுவரை	8
1½ ,,	2 ,,	12
2 ,,	2½ ,,	16
2½ ,,	3 ,,	20
3 ,,	3½ ,,	24
3½ ,,	4 ,,	28
4 ,,	4½ ,,	32
4½ ,,	5 ,,	36
5 ,,	5½ ,,	40
5½ ,,	6 ,,	44

6 அணுவுக்கு மேல் விலையுள்ளது 48.

தினசரிகளின் விஸ்தீரணத்தில் 50 சதத்திற்கதிகமாயும், வாரப் பத்திரிகைகளின் விஸ்தீரணத்தில் 55 சதத்திற்கதிகமாயும் விளம்பரங்கள் இருக்கக் கூடாது. தினசரிகளில் வரிசையாக 14 வெளியீடுகளும் வாரப்பத்திரிகைளில் 24 வெளியீடுகளும் இவ்விதம் விளம்பர சராசரி அளவெடுக்கக் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படும்.

ஜனுப் ஜின்னு

7-ந்தேதி நடந்த அகில இந்திய முஸ்லிம் லீக் சபைக் கூட்டத்தில் எல்லா மாகாணங்களும் ஜனுப் ஜின்னுவையே மேலும் ஒரு வருஷத்துக்கு, முஸ்லிம் லீகின் தலைவராக சிபார்சு செய்ததாகவும், ஆகவே அவரே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருரென்றும் அறிவிக்கப்பட்டது.

லின்லித்கோவுக்கு யோகம்

வைஸ்ராய் லின்லித்கோ பிரபுவின் பதவி மேலும்—அநேகமாக யுத்தம் முடியும் வரையில் - நீடிக்கப்படலாம். ஆனுல் லின்லித்கோ இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிப்பாரா மாட்டாரா என்பது தெரியவில்லை.

நாய் வளர்க்க லைசென்ஸ்

பம்பாய் நகரில் தனிப்பட்டவர்கள் வீட்டில், நாய் வளர்ப்பதானுல் வருஷத்துக்கு ஐந்து ரூபாய்க்கு அதிகப்படாமல் ஒரு குறிப்பிட்ட தொகையை லைசென்ஸ் கட்டணமாகச் செலுத்தவேண்டுமென பம்பாய் நகர முனிஸிபல் சட்டத்தைத் திருத்தியிருக்கிருர்கள்.

ராணித் தலை ரூபாய்

ராணித்தலை ரூபாயும் அரை ரூபாயும் ஏழாவது எட்வர்ட் தலை போட்ட ரூபாயும் அரை ரூபாயும் ரிசர்வ் பாங்கியிலும் 1943-ஏப்ரல் 30-ந் தேதிக்குப் பிறகு வாங்கிக்கொள்ளப்பட மாட்டாவென ஒரு அறிக்கை கூறுகிறது.

ஸ்ரீ ஆனே மீண்டும் சேர்ந்து விட்டார்

சமீபத்தில் வைஸ்ராய் நிர்வாக சபையிலிருந்து ராஜினாமா செய்த ஸ்ரீ எம் எஸ் ஆனே கட்சிப் பற்றற்ற தலைவர்கள் மகாநாட்டு நிரந்தரக் கமிட்டியில் மீண்டும் சேர்ந்துவிட்டதாகத் தெரிகிறது.

(முன் பக்க தொடர்ச்சி)

களை நாம் எங்ஙனம் சாதிக்கப் போகிரேம்? ஹாங்கோவை நாங்கள் காலி செய்ய நேர்ந்தது: நாங்கள் பிறகும் எதிரியை எதிர்த்தோம். நானும், சீனத் தலைவர் ஷாங்கே ஷேக்கும் சாங் ஷா முனை வழியாகக் கடந்து சென்ரேம். ஒரு நாள் நாங்களிருவரும் ஹெங்கியண்டு மலைக்குப் போனேம். அங்கு 2,000 வருஷங்களுக்கு முன் போடப்பட்ட பந்தல் உண்டு. 2000 வருஷங்களுக்கு முன்பு இங்கு ஒரு பிரஸித்தமான புத்தர் கோயில் இருக்கிறது. ஒரு இளம் புத்த ஸன்யாஸி கோயில் முன் உட்கார்ந்து நாள் முழுதும் "அமித புத்தா" என்று உச்சரித்தார். கருணை பெற வேண்டுமென்று அவர் அனுதினமும் அவ்வண்ணமே செய்தார். கோயிலின் பெரிய மதகுரு ஒருவர் தினசரி ஒரு கல்லை மற்றொரு கல்லின் மீது உரைத்துப்பார்த்தார். இதை இளம் ஸன்யாஸி கண் திறந்து பார்ப்பதுண்டு. ஒரு நாள் அவ்விளம்ஸன்யாஸி பெரியகுருவைப் பார்த்து "இது என்ன?!' வென்று கேட்டார். "இதிலிருந்து ஒரு கண்ணுடி செய்யப்போகிறேன்" என்ருர் பெரிய குரு.

"கல்லிலிருந்து கண்ணுடியா? முடியாதே" என்ருர் ஸன்யாஸி.

"ஆமாம். இதைப் போலவே ஒன்றும் செய்யாமல் "அமித புத்தா" என்று மட்டும் உச்சரித்தால், கருணை கிட்டாது" என்ருர் பெரிய குரு. எனவே நமக்கு லட்சியங்கள் உண்டு என்பதால் மட்டும் பயனில்லை. அதை நாம் நிறைவேற்ற முற்பட வேண்டும்.—"ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்டு"

சப்இன்ஸ்பெக்டருக்குக் கடுங்காவல்

பஞ்சாப் போலீஸ் உதவி சப் இன்ஸ்பெக்டர் சையத் இக்பால் ஹுசேன் சந்தேகத்தின்மேல் கைதிசெய்யப்பட்ட ஒருவரை அடித்துத் துன்புறுத்தி அவரது மரணத்துக்குக் காரணமாக விருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு 9 மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

விவாகத்திற்காக 10 நாள் விடுதலை

ஜலாபூர் தாலூகாவைச் சேர்ந்த மிகாபாய் வலுபாய் படேல் என்பவர் தமது விவாகத்தை முன்னிட்டு நிபந்தனையின் பேரில் 10 நாட்களுக்கு மட்டும் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

அட்டைப் படம்

★

'சிவ கவி' படத்தில் தோன்றும் டி. ஆர். ராஜகுமாரி

புத்தி நுட்பம்

★

(எம். என். கணேசய்யர்)

புத்தி நுட்பத்தைக் குறிக்க உலகில் அநேக உதாரணங்கள் உண்டு. பரமசிவனுக்கு மகாகணபதியும் சுப்ரமணியரும் இரண்டு குமாரர்கள். மகாகணபதி மூத்தவர். சுப்ரமணியர் இளையவர். சுப்ரமணியர் தனக்குத்தான் புத்தி நுட்பம் உண்டென்று எண்ணி இருந்தார். அவர் எண்ணம் தப்பு என்பது பரமசிவனுக்குத் தெரியும். அதை வெளிக்கு காட்ட பரமசிவன் ஒரு யுக்தி செய்தார். பரமசிவனது பக்தர் ஒருவர் மல்கோவா மாம்பழமொன்றை பரமசிவனுக்கு அர்ப்பணம் செய்திருந்தார். அதை அவர் தன் திருக்கரங்களில் வைத்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் மகாகணபதியும் சுப்ரமணியரும் அங்கு வந்தார்கள். தகப்பனுர் கையிலிருந்த மாம்பழத்தைக் கண்டதும் அவர்களது நாக்குகளில் ஜலம் ஊறிற்று. அம்மாம்பழத்தின் நறுமணம் எங்கும் வீசிற்று. மகாகணபதியும் சுப்ரமணியரும் ஏககாலத்தில் மாம்பழத்திற்காக தங்கள் கரங்களை நீட்டினுர்கள். இருந்ததோ ஒரே பழம்; அதை யாருக்கு கொடுப்பது? மகா கணபதிக்கு கொடுத்தால் சுப்ரமணியருக்கு கோபம் வரும். சுப்ரமணியருக்குக் கொடுத்தால் மகாகணபதிக்கு கோபம். பெரியவன் என்று கொடுத்துவிட்டார் என்பார் சுப்ரமணியர் சிறியவன் என்று கொடுத்து விட்டார் என்பார் மகா கணபதி. இருவர் சொல்வதும் சரியே. ஆதலால் பரமசிவன் ஒரு யுக்தி செய்தார். அவர்கள் இருவரையும் பார்த்து, என் அருமைக் குமாரர்களே இருப்பதோ ஒரே பழம். நான் அதை யாருக்குக் கொடுப்பது. அண்ணனுக்கு கொடுத்தால் தம்பிக்கு கோபம் வரும். தம்பிக்கு கொடுத்தால் அண்ணனுக்கு கோபம் வரும். ஆதலால் நீங்கள் ஒரு காரியம் செய்யுங்கள். மூன்று உலகங்களையும் சுற்றி வந்து, யார் முதலில் என்னிடம் வருகிறீர்களோ அவர் இந்தப் பழத்தைப் பெற்றுக் கொள்ளலாம்! என்ருர். சுப்ரமணியர் உடனே தனது வாகனமாகிய மயிலை அழைத்தார். அது ஓடி வந்து அவர் முன் நின்றது. அதன் மேல் தாவி ஏறி உட்கார்ந்து கொண்டு மூவுலகங்களையும் ஒரு நொடியில் சுற்றி வந்து விடலாமென்று புறப்பட்டார். மகா கணபதியின் வாகனம் மூஞ்சூறு என்பது தெரிந்த விஷயம். அதன் மேலேறிக் கொண்டு மூன்று உலகங்களையும் சுற்றி வருவது முடியக்கூடிய காரியமா? மகாகணபதி ஒரு யுக்தி செய்தார். பரமசிவனை சுற்றி வந்து நமஸ்கரித்து தனது கரங்களை நீட்டினுர். பரமசிவன் களி கூர்ந்து, மாம்பழத்தை அவருக்கு அளித்தார்.

முப்பழம் நுகரும் மூஷிகவாகனன் அதை அருந்தி விட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் சுப்ரமணியர் வியர்க்க விறுவிறுக்க மயில் வாகனத்திலிருந்து இறங்கி வந்து பார்த்தார். மகா கணபதி அங்கு உட்கார்ந்திருக்கக் கண்டார். மாம்பழத்தின் தோலும் கொட்டையும் அங்கு கிடக்கக் கண்டார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. தமையன் ஜயித்தார் என்றது மாத்திரம் தான் அவருக்கு பட்டது. தகப்பனுரை நோக்கினுர். தகப்பனுர் அவரைப் பார்த்து புன்னகையுடன் 'கண்மணி சுப்ரமணியா' அண்ணு என்ன செய்தார். மாம்பழத்தை எப்படி அடைந்தார் என்று உனக்கு புலப்பட வேண்டுமல்லவா? மூவுலகங்களும் என்னில் அடக்கம் என்ற விஷயம் உனக்குத் தெரியாததல்லவே. ஆதலால் என்னைப் பிரதக்ஷணம் சுற்றி வந்தால் மூவுலகையும் சுற்றி வந்தது போலவன்ரே. உன் தமயன் என்னை பிரதட்சணம் செய்து நமஸ்காரம் செய்தான். மாம்பழத்தை அடைந்தான். அவ்வளவே. இதில் என்ன பாரபட்சம் இருக்கிறது? நீயே யோசித்துப்பார்" என்ருர். அண்ணனும் தகப்பனும் செய்தது சரியென்று சுப்ரமணியருக்குப்பட்டது. பிறகு பரமசிவன் தேறுதலுக்காக சுப்ரமணியரை கட்டியணைத்து 'செல்வக்குமாரா உனக்குப் பழம் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட வேண்டாம். தெற்கே பழனி என்று ஒரு புண்ணியமலை இருக்கிறது. நீ அங்கே போய் அந்த மலையை உன்னிருப்பிடமாக வைத்துக்கொள். அதைச் சுற்றிலும் தேனிலும் சுவையுள்ள பழங்கள் அளிக்கும் வாழைத் தோட்டங்கள் ஏராளமாக உண்டு. உனது பக்தர்கள் அம்மலைப் பழங்களை உபயோகித்து அதிருசிகரமான பஞ்சாமிருதம் தயார் செய்து உனது மனங்குளிர அபிஷேகமும் நைவேத்தியமும் செய்வார்கள் என்று அருள் செய்தார்.

பழனி பஞ்சாமிருதமே பஞ்சாமிர்தமன்ரே.

கஸபிளாங்கா மகாநாடு

கஸபிளாங்காவில் நடந்த ராணுவத் தலைவர்கள் மகாநாடு ஸர் சார்லஸ் போர்ட்டல், அட்மிரல் டட்லிபவுண்டு, மிஸ்டர் சர்ச்சில், பீல்டு மார்ஷல் ஸர் ஜான் டில், ஜெனரல் ஸர் ஆலன் ப்ரூக், ஸர் அலக்ஸாண்டர் முதலியவர்கள் உட்கார்ந்திருக்கின்றனர்.

★

ஸ்ரீ குழுமியானந்த ஸ்வாமிக்குக் கும்பாபிஷேகம்

திருச்சி ஸ்ரீ குழுமியானந்த ஸ்வாமி ஆலயத்துக்குச் சமீபத்தில் ஸ்ரீமான் எம். கே. தியாகராஜ பாகவதரும் அவரைச் சேர்ந்தவர்களும் சேர்ந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்கள்.

★

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி, உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S. I.

இனும் வைத்திய வித்தை

பூர்ண ஆரோக்கியம் இன்ப வாழ்க்கை, நல்ல சந்ததிக்கும் வழி.

மதன மஞ்ஜரி பார்மஸி, 184 சைன பஜார், மதராஸ்.